Registered as a NewsPaper

விலை 7.00 ரூபா

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–20 | 04–07–2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை –137




# இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான

# சாதகமான நிலை சந்திரிகாவிடம் இல்லை!

## எரிக்சூல் ஹெய்மிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

**சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எந்த இடைக்கால நிர்வாக அடிப்படையிலும் விடுதலைப்புலிகளிடம் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் கட்டுப்பாட்டை ஒப்படைப்பதற்கு சந்தர்ப்பம் இல்லையென கொழும்பிலுள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவர் தெரிவிக்கின்றார். இதனைத் தம்மைச் சந்தித்த நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்மிடம் சனாதிபதி சந்திரிகா தெளிவுபடுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.**

விடுதலைப்புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வழங்குவது தனியுரிமைக் கட்டுப்பாட்டை குறித்து நிற்பதாகவும் ஏனைய தமிழ்க் குழுக்களின் பிரதிநிதித்துவம் இடம்பெற வேண்டுமென அவர் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று வழங்கப்படுமானால் வடக்கு-கிழக்குப் புனரமைப்பிற்கான நிதி விடுதலைப்புலிகளிடம் சென்றடைந்து விடும் எனவும் இதனால் அரசாங்கத்திற்குப் பயன் ஏதும் கிட்டமாட்டாது எனவும் சனாதிபதி சந்திரிகா கருதுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, புனர்வாழ்வு, புனரமைப்புப்பணிகளில் அரச அதிகாரிகள் பங்காற்றுவதற்கான வாய்ப்பு இல்லாது போய்விடும் எனவும் அவர் கருதுவதாகவுள்ளது. ஏற்கனவே சிறிலங்கா (12 ஆம்பக்கம் பார்க்க)

## இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்கு 04 எக்ஸ்ரே கருவிகள் அமெ. அன்பளிப்பு

இலங்கையில் இருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்கள் அனைத்தையும் விசேட பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக அமெரிக்கா நான்கு எக்ஸ்றே இயந்திரங்களை இலங்கைத்துறைமுக அதிகார சபைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. அண்மையில் அமெரிக்க அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்து இதுதொடர்பாக இலங்கைத் துறைமுக அதிகார சபையுடன் கலந்து ரையாடியுள்ளார்கள். ஒரு எக்ஸ்றே இயந்திரத்தின் விலை 65 இலட்சம் அமெரிக்க டொலராகும்.

அமெரிக்காவுக்குள் தீவிரவாதிகளின் தாக்குதல்களில் இருந்து விழிப்புடன் இருப்பதற்காக அமெரிக்க அரசாங்கம் இதனை அன்பளிப்புச் செய்துள்ளது. அதே வேளை அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் சுங்கப்பரிசோதனைகளுக்கு உதவிகள் வழங்கும் எனவும் உறுதியளித்திருக்கிறது. இதேவேளை அமெரிக்க அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் இலங்கையில் மட்டுமல்ல பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இந்திய நாடுகளிலேயும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அமெ

(12 ஆம்பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் ஆகஸ்ட்டில் இந்தியா விஜயம்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் ஆகஸ்ட் மாதம் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவர்கள் இலங்கையில் தற்போது தமிழர்களின் நிலை தொடர்பாக தமிழ் அரசியல்வாதிகளுக்குக் கூறவுள்ளனர்.

தமிழரசுக் கட்சி யூலை மாதம் இந்தியாவிற்கு செல்லஇருந்தது. ஆனால் சம்பந்தன் தற்போது அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தவறான மருந்து வழங்கலால் குழந்தையின் நிலை பாதிப்பு

வன்னிப்பகுதியில் ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் பிழையான முறையிலும் அளவிற்கு அதிகமாகவும் ஆங்கில மருந்துகளைக் கொடுத்ததனால் மூன்று வயதுக் குழந்தை பாதிப்புற்ற நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்படி வைத்தியரை விசாரித்த போது அளவுக்கு அதிகமாக மருந்து கொடுத் (12 ஆம் பக்கம் பார்க்க)


## பாரவூர்தி சக்கரத்தினுள் சிக்குண்டு உந்துருளி ஓட்டுனர் ஸ்தலத்தில் பலி

### பின்னிருக்கையிலிருந்தவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

பாரவூர்தி உந்துருளியுடன் மோதியதில் உந்துருளி ஓட்டுனர் ஸ்தலத்தில் பலியானார். உந்துருளியின் பின்னிருந்து பயணித்தவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருகின்றார்.

மேற்படி சம்பவம் நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் ஆனையிறவு ஏ-9 நெடுஞ்சாலையில் இடம்பெற்றுள்ளது. பளையிலிருந்து, கிளிநொச்சி நோக்கி வந்து கொண்டிருந்த உந்துருளியுடன் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து மணல் ஏற்றிக் கொண்டு பளைநோக்கி சென்று (12 ஆம் பக்கம் பார்க்க)



(படம்-சோதி)

## கரும்புலிகள் நினைவாலயம் மாங்குளத்தில் திறந்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ கரும்புலிகள் நாளை முன்னிட்டு மாங்குளப்பகுதியில் கரும்புலிகள் நினைவாலயமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 10.30 மணிக்கு நடைபெற்ற இத்திறப்புவிழாவின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை கடற்புலிகளைச் சேர்ந்த நிசாம் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த மதன்ராஜ் ஏற்றி (12 ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்.குடாநாட்டில் 3 இடங்களில் கரும்புலிகள் நினைவு நிகழ்வுகள்

யாழ்குடாநாட்டில் மூன்று இடங்களில் 'கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் எழுச்சியுடன் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இது தொடர்பாக கரும்புலிகள் நினைவு நாள் ஏற்பாட்டுக்குழு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கரும்புலிகள் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிகரமான திருப்புமுனைகளை உருவாக்கித் தந்தவர்கள். இவர்களே ஆயுதந்தாங்கிய போராட்ட வடிவங்களில் ஒரு புதிய வெற்றிகரமான பரிணாமத்தை அறிமுகப்படுத்தியவர்கள். இப்புதிய பரிணாமம் பரந்த விளைவுகளை ஏற்படுத்த வல்லதாக விளங்குகிறது. கரும்புலிகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட உயிராயுதங்கள். தமிழ் மக்களின் நலனை, தமிழ் மக்கள் வளமிக்க எதிர்காலத்தை எட்டு வதையே இலட்சியமாக வரித்து பற்றுறுதியுடன் குமுறும் எரிமலை யாகி வெடித்துச் சிதறும் கரும்புலிக (12 ஆம்பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கரும்புலிகளின் உருவப்பட ஊர்தி பவனி

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் கரும்புலிகள் தினத்தினை எழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் தெரிவிக்கின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடைந்த 261 கரும்புலிகளின் திருவுருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி வவுனியா நகர்ப்பகுதி எங்கும் பவனியாக எடுத்துச் செல்லப்படவுள்ளது. வவுனியா மாவட்டத்தினைச் சேர்ந்த 15 கரும்புலிகளும் இதற்குள்அடங்குவர்.

(12 ஆம்பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கருத்தரங்கு

யூலை -24 ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை. கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. பொதுஉளச்சார்பு வகுப்பு. காலம்:- 03.07.2004 சனி மாலை 4.00-7.00. விரிவுரை:-வவுனியா, கிளிநொச்சி விரிவுரையாளர்களால் நடாத்தப்படும் கட்டணம் 50/=. அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும். நிர்வாகி:- (4756)

### வேந்தன் பல்கட்டும் நிலையம்

சொந்தப் பற்களுக்கு நிகரான சங்குப்பற்களைக் கட்டுவதற்கும்; சிறந்தமுறையில் தயாரான சாதாரண பற்களைக் கட்டுவதற்கும், மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் "கிளிப்" போடுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் வேந்தன் பல்கட்டும் நிலையம். மத்திய கல்லூரி மைதானம் முன்பாக ஏ-9 சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சி. (சி- 9837)

### இறைவனுக்கு நன்றி தெரிவிப்போம்

உலக சமாதானம் வேண்டி வெள்ளிக்கிழமைகள் தோறும் விசேட வழிபாடுகளை வழிபாட்டுத் தலங்கள் தோறும் மேற்கொள்க. இலங்கை இந்து இறை ஏரி பேரவை-திருகோணமலை. (4773)

### தவறிவிட்டது

சி.சதீஸ்குமார்,இல149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த எனது பிரயாணப்பை முகமாலைக்கும் பரந்தனுக்கும் இடையில் தவறிவிட்டது. இந்தப்பை பச்சைக் கலர், 2VDOலைட், 2வயர்செட், 2VDO கமரா, பற்றரி2, சேகிட்துணி Red,1மல்டிபிலிக் கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியிலோ ஈழநாதப்பணிமனை, யாழ் சாலை, கிளிநொச்சியிலோ ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தகவல். சி.சதீஸ்குமார். (4757)

### தவறிவிட்டது

சின்னத்தம்பி சயானந்தன் தாவடி வடக்கு கொக்குவில் முகவரியுடைவரின் தேசிய அடையாள அட்டை 28.06.2004 கரடிப்போக்கு-பரந்தனுக்கிடையில்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அன்னாசியன் குளம், மல்லாவி மத்தி என்ற முகவரிக்கோ, ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தகவல்-ரமேஸ். (4773)

### ஆசிரியர் போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு

இடம்:- கிளி.ம.வி. காலம்:- 04.07.2004, ஞாயிறு, காலை 9.00 மணி. விரிவுரையாளர்:- ஜெயகாந்தன. தகவல்:- பேரிகை அமைப்பு, கிளிநொச்சி. (4768)

# தமிழ் மக்களின் உணர்வுடன் ஒன்றிவிட்ட உன்னதத்தின் உச்சங்கள் கரும்புலிகள்

## - யாழ்.மாவட்ட தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு

தமிழ்த்தேசியத்தின் விடிவுக்காக, தமிழீழ தாயகத்தின் முகிழ்ப்பின் பெருவெடிப்பாக, உயிராயுதமாக தம்மையே ஈகமாக்கி தமிழ் மக்களின் உணர்வுடன் ஒன்றிவிட்ட, உன்னதத்தின் உச்சத்தை எட்டிய கரும்புலிகளை நெஞ்சத்திலிருத்தி நினைவு கூரும் நாள் கரும்புலிகள் நாள்.

இவ்வாறு யாழ்.மாவட்ட தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு கரும்புலிகள் நாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

எங்கெங்கெல்லாம் இலக்குகள அமைகின்றனவோ அங்கங்கெல்லாம இலக்குத்தவறாது. தமிழ் மக்களின் இருப்பை உறுதி செய்வதற்காக அந்த இலக்குகளைத்தாக்கி அழிக்கும் உயர்திறனைக் கொண்ட கரும்புலிகளே தமிழீழ மக்களின் அபிலாசைகளை எட்டுவதற்கான உயிராயுதங்கள்.

தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளை புறந்தள்ளி, சமாதானத்திற்கான நகர்வுகளைக் கேள்விக்குரியதாக்கி, போரை நோக்கி பொருத்தமான அரிதாரப் பூச்சுக்களுடன் சிறிலங்காப் பேரினவாதம் பேயாட்டம் போடத் தயாராகி வரும் வரலாற்றுக் கட்டமிது.

இந்த வரலாற்றுக் கட்டத்தின் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு இடையறாத விழிப்புடன் தமிழ் தேசியத்தைத் தக்கவைக்க தமிழ் மக்கள் அனைவருமே அணி திரள்வோம். ஒரே தலைமையின் கீழ்- அணி திரளுகைக்கான பாதையில் கரும்புலிகள் ஒளிர் வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள்.

வரும் நாளைய நாள்,கரும்புலிகளை தமிழ் மக்கள் அனைவருமே நினைவுகூரும் புனிதநாள் இந் நாளில் கரும்புலிகளை நினைவு கூருவதற்கான நிகழ்வுகள் பரந்தளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்புனித நாளில் கரும்புலிகளை நினைவுகூரும் நிகழ்வுகளில் தமிழ் மக்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

# கிளி.இல் பொறியியல் பீடம் நிறுவுவதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்தக் கோரிக்கை

## - மொறட்டுவ பல்கலைத் துணைவேந்தரிடம் விடுக்கப்பட்டது

மாணவர்களுக்கு தொழில் நுட்பக் கல்வி தொடர்பான தேவைகள் பற்றியும், கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரியை அங்கீகரிக்கப் பட்ட ஓர் தொழில் நுட்ப நிறுவனமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், கிளிநொச்சியில் அமையவுள்ள யாழ். பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் எஸ்.விஜயசேகரவிடம் நேற்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் துரைராஜா ஞாபகார்த்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் தயந்த எஸ்.விஜயசேகர சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் கேட்போர் கூடத்தில் மாணவர் தரப்புத் தலைவர்களுடன் கலந்துரையாடிய வேளை இக்கோரிக்கைகளை விடுத்துள்ளனர். அத்துடன் தற்போது சமாதானச் சூழல் இருக்கின்ற வேளை மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள், இடம் பெயர்ந்த மக்கள் பிரச்சினைகள் மற்றும் இராணுவமும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் திட்டமிட்டு மேற்கொள்கின்ற கலாசார சீரழிவு நடவடிக்கைகள் பற்றியும் கூறியுள்ளார்.

இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் , சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் செல்வக்குமார், தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் யோகராஜா ஆகியோர் உட்பட மாணவர் பேரவை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.(36)

## 05. 07. 2004 புலிகளின்குரலின் கரும்புலிகள் நாள்

### சிறப்பு ஒலிபரப்பில் காலை 6.30 தொடக்கம் இரவு 10.00 மணி வரை ஒலிபரப்பாகவுள்ள நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 6.30இற்கு:- | ஆரம்பம் - தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் சிந்தனை. - மாவீரர்வணக்கம். தொடர்ந்து - கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசைஅவர்கள் கரும்புலிகள் பற்றிப் பகிர்ந்து கொள்கிறார். |
| 7.30இற்கு:- | செய்திகள் - அறிவித்தல்கள் அடுத்து -"உயிர்மின்னல்" சிறப்புக் கவித்தொடரின் இறுதிப் பகுதி |
| 7.55இற்கு:- | நாளாந்த அவதானிப்பு போட்டி வினாவிடைகள். |
| 8.00மணிக்கு:- | வில்லிசை ரட்ணா எழுதிய "தடைநீக்கிகள்" தொடர்ந்து கவியும் கானமும். |
| 8.58இற்கு | பொதுச்சுடர் ஏற்றப்படும். |
| 9.00மணிக்கு:- | கரும்புலிகள் நாள் நிகழ்வுக்காக தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்படும் - அவ்வேளையில்கொடிவணக்கப் பாடல் ஒலிபரப்பாகும். -தொடர்ந்து - அகவணக்கம் செலுத்தப்படும். அதனைத்தொடர்ந்து சி.கண்ணம்மா எழுதிய சிறப்பு நிகழ்ச்சி "சுட்டும் வழிநடந்த சூரியக் குழந்தைகள்" அதனைத்தொடர்ந்து கவியும் கானமும். |
| 10.00மணிக்கு:- | சிறப்பு நிகழ்ச்சி - போராளி பிரமிளா எழுதிய - "நெருப்பு மனிதர்கள்". |
| 10.30இற்கு:- | சிறப்பு உணர்வலைகள் எழுதியவர்- போராளி நிலா. |
| 11.00மணிக்கு:- | சிறப்பு நிகழ்ச்சி - கவிஞர் நாவண்ணன் எழுதிய - 'அழியாத ஆன்மாக்கள்' |
| 11.30இற்கு:- | அம்புலி எழுதிய - "பெயர் குறிப்பிடாத துருவ உடுக்கள்" சிறப்பு நிகழ்ச்சி. |
| 12.00மணிக்கு:- | வில்லிசை - கீதன் எழுதிய - "கண்மணிகளே எங்கள் கரும்புலிகள்" |
| 12.30இற்கு:- | புயலவன் எழுதிய - "காலத்தின் ஓவியங்களே நீங்கள் ஈழத்தின் காவியங்கள்" சிறப்பு நிகழ்ச்சி. |
| 1.00மணிக்கு:- | செய்திகள் - தொடர்ந்து - கவிதையும் கானங்களும். |
| 1.30இற்கு:- | சிறப்பு நிகழ்ச்சி - நா. யோகேந்திரநாதன் எழுதிய "தூணிலும் துரும்பிலும்" தொடர்ந்து கவிதையும்கானங்களும். |
| 2.30இற்கு:- | சிறப்பு நிகழ்ச்சி -வேலணையூர் சுரேஸ் எழுதிய "கோலமாய் நெஞ்சில் கொலுவிருக்கும் கரும்புலிகள்" |
| 3.30இற்கு:- | செய்திகள் - தொடர்ந்து தமிழீழ அரசியல்துறை மகளிர்துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழ்விழியின் உரை |
| 4.30இற்கு:- | செய்திகள் - அடுத்து சிறப்பு நாடகம் - கனக கர்ண இந்து எழுதிய - "பெயராய் வருவேன்" |
| 5.00இற்கு:- | செந்திருவின் தயாரிப்பில் கரும்புலிகள் நாள் சிறப்பு நிகழ்ச்சி. |
| 5.30இறகு:- | செய்திகள் - தொடர்ந்து கவிதையும் கானங்களும் |
| 6.15இற்கு:- | சிங்களமொழியிலான செய்தி அறிக்கை. தொடர்ந்து சிறப்புநிகழ்ச்சி செம்பருதி எழுதிய "வாழ்வுக்கே வாழ்வைக்கற்பித்த வாசகங்கள்" அதனைத்தொடர்ந்து கவிதையும் கானங்களும். |
| 7.05இற்கு:- | அடுத்து - "அகங்களில் இருத்தி உறுதி கொள்வோம்" கரும்புலி மாவீரர்களுக்கான பொதுச்சுடர் ஏற்றப்படும். அதனையடுத்து - முல்லைக்கமல் தலைமையில் "இருளைக்கலைத்த கரியமுகில்கள்" கவியரங்கம். |
| 7.30இற்கு:- | செய்திகள் - அடுத்து 'உணர்வும் பகிர்வும்' - தயாரித்து வழங்குபவர் வே.சுபா. |
| 8.15இற்கு:- | அகமும் புறமும். எழுதியவர் நா.யோகேந்திரநாதன் |
| 8.30இற்கு:- | செய்திகள் - அறிவித்தல்கள் - செய்திவீச்சு அடுத்து கருத்துப் பகிர்வு. |
| 9.00மணிக்கு:- | மாங்கேணி இராணுவமுகாம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டதன் நினைவாக - பிருந்தா எழுதிய - "மறக்கமுடியாத மாங்கேணி" நினைவூட்டல். |
| 9.30 இற்கு:- | செய்திகள் - தொடர்ந்து கவிதையும் கானங்களும் |
| 9.55 இற்கு:- | நாளாந்த அவதானிப்பு போட்டி வினாக்கள் |
| 10.00மணிக்கு:- | ஒலிபரப்பு நிறைவு பெறும். |

## மாடிக்கட்டடம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

புலோலி மேற்கு தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் 50 இலட்சம் ரூபா செலவில் புதிய மாடிக்கட்டடம் ஒன்றினை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் அமைத்து வருகிறது.

அத்துடன் இப்பாடசாலைக்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் 2 இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களையும் வழங்கியுள்ளது. (33)

## கமக்கார வங்கி திறந்து வைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவது கமக்கார வங்கியினை குமுழமுனையில் கடந்த புதன் கிழமை பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திறந்து வைத்தார்.

குமுழமுனை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.அமிர்தலிங்கம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை முல்லை.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு.செ.முகுந்தன் ஏற்றிவைத்தார்.

இவ்வங்கி விவசாயிகளுக்கு தேவையான கடன்களை வழங்குவதோடு, விவசாயிகளின் சேமிப்புக்களையும் ஏற்றுக்கொண்டு எதிர் காலத்தில் விவசாய ஓய்வூதியங்கள் சம்பந்தமான கொடுக்கல், வாங்கல்களையும், இடம் பெயர்ந்தோருக்கான கொடுப்பனவுகளையும் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் கூ.அ.உ. ஆணையாளர் தெரிவித்தார். இதே போன்று முல்லை. மாவட்டத்தில் 09 வங்கிகள இன்னமும் நிறுவப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிததுள்ளார்.(20)




## வட்டுவாகல் சப்தகன்னிமார் வருடாந்த பொங்கல் உற்சவம்

மேற்படி வருடாந்த பொங்கல் உற்சவம் 28-06-2004 தீர்த்தத்துடன் ஆரம்பமாகி 05-07-2004 அன்று பகல் அபிஷேக ஆராதனை 12.30 மணிக்கு ஆரம்பமாகி பகல் பூசைகள் இனிதே நிறைவுபெறும். இரவு மடப்பண்டம் எடுத்தல், கச்சுநேருதல், வளந்துநேருதல், பாண்டிவிளையாடுதல்,ஊஞ்சலாடுதல், பரியலம் வழிவிடுதல் என்பவற்றுடன் இரவு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

ஆலய பரிபாலனசபை
சப்தகன்னிமார்
வட்டுவாகல்.

(4661)


## சாவு அறிவித்தல்

### தம்பையா சின்னத்தங்கச்சி

நெடுந்தீவு மேற்கைப்பிறப்பிடமாகவும், இல. 55, ஸ்கந்தபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சின்னத்தங்கச்சி 03.07.2004 சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின் பாசமிகு மனைவியும், சுப்பிரமணியம் (அக்கராயன் ப.நோ.கூ.சங்க முன்னாள் ஓய்வு பெற்ற கொள்வனவு உத்தியோகஸ்தர்), அமரர் குமாரசாமி(ஸ்கந்தபுரம்),தங்கமணி (ஸ்கந்தபுரம்), தியாகராஜா (ஸ்கந்தபுரம்), சண்முகநாதன் (கிராமசேவையாளர், பாரதிநகர், துணுக்காய் உதவி அரசங்க அதிபர் பணிமனை), கிருஸ்ண பிள்ளை (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பார்வதிப்பிள்ளை, கனகம்மா, அம்பலவாணர், பத்மராணி, புஸ்பராணி, புனிதவதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.07.2004 ஞாயிற்றுக் கிழமை மாலை 03.00 மணிக்கு அன்னாரின் இல்லமான இல.55, ஸ்கந்தபுரத்தில் நடைபெற்று ஸ்கந்தபுரம் பொதுமயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரிற்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:-
மக்கள், மருமக்கள்

(4627)

# முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைன் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார்

## -சதாமின் சட்டத்தரணிகள் தெரிவிப்பு

(பாக்தாத்)

**அமெரிக்காவின் காவலில் இருந்த போது ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம்ஹுசைன் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக அவரின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். சதாமை விசாரிப்பதாக நியமிக்கப்பட்டுள்ள விசேட விசாரணை மன்றம் சட்டவிரோதமானது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.**

யோர்தானின் தலைநகரான அம்மானில் உள்ள சட்டத்தரணி இராம் அல்ஹசாரி அமெரிக்க பாதுகாப்பில் சதாம்ஹுசைன் சித்திரவதை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சதாம்ஹுசைனின் உடம்பில் காயங்கள் இருப்பதாக செஞ்சிலுவை அறிக்கை ஒன்றிலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறுகின்றார்.

டச்சு ஒலிபரப்பு நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

இதேவேளை சதாம்ஹுசைனின் மீதான விசாரணைகளை சர்வதேச சமூகம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்றும் இந்த விசாரணைகள் நியாயமாக நடைபெறுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பின் தலைவர் கேட்டுள்ளார்.



ஈராக்கிய முன்னைநாள் சனாதிபதி சதாம்ஹுசைன் விலங்குடன் ஈராக் நீதியாளரின் முன் விசாரணைக்கு வந்தடைந்தார்.



வடபிலிப் பைன்ஸில் வெள்ளப் பெருக்கு நீருள் நடந்து செல்லும் குழந்தைகள்.

# 10 இலட்சம் மக்களை வெளியேற்ற காரணமான இராணுவத்தினரை நிராயுத பாணிகளாக்க முடியும்

## சூடான் சனாதிபதி ஓமர் ஹசன்

சூடானின் டாபர் பகுதியில் இருந்து 10 இலட்சம் ஆபிரிக்க மக்களை விரட்டிய அரபு இராணுவத்தினரை நிராயுதபாணிகளாக்க முடியும் என்று சூடான் சனாதிபதி ஓமர் ஹசன் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளார். சூடானின் தலைநகரமான காட்டோமில் இரு தலைவர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது அரபு இராணுவத்தினரை நிராயுத பாணிகளாக்காவிட்டால் பொது மக்கள் சூடானில் இருந்து வெளியேறுவதைத் தடுக்க முடியாது என்றும் பட்டினியால் வாடும் இலட்சக்கணக்கான மக்களுக்கு உணவுப் பொருட்களையும் ஏனைய நிவாரணப் பொருட்களையும் எடுத்துச் செல்வது இயலாத விடயம் என்றும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் வற்புறுத்தி தெரிவித்துள்ளார். இந்தப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சர் முஸ்தபா உஸ்மான் கருத்து வெளியிடுகையில் அரபு இராணுவத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவென சூடானில் அதிக எண்ணிக்கையான இராணுவ வீரர்கள் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள் என்று தெரிவித்தார். அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலும் இம் மாதம் முற்பகுதியில் காட்டோமிற்கு சென்று பேச்சு வார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் அரபு இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்களை சூடான் அரசாங்கம் நிறுத்தாவிட்டால் சூடான் அரசாங்கத்திற்கு எதிராக பொருளாதார தடைகளை பாதுகாப்புச் சபை கொண்டு வருவது பற்றி ஆலோசனை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அங்கத்தவர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்ட நகல் தீர்மானத்தில் ஆயுதத்தடை அரபு இராணுவத்தினர் மீதான வெளிநாட்டுப் பிரயாணத்தடை என்பன அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பெரு நாட்டு சனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## உணவு விடுதிகள், அலுவலகங்கள் தீக்கிரை

பெரு நாட்டின் சனாதிபதிக்கு எதிராக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது.இதில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அரச அலுவலகங்கள், உணவுவிடுதிகள் பலவற்றிற்கு தீ வைத்துள்ளனர்.

தென்அமெரிக்க நாடுகளில் ஒன்றான பெரு நாட்டின் சனாதிபதி அஸ்ஜன்ஜோர் டேஹர். இவருக்கு எதிராக நாட்டின் தெற்கு நகரான ஜக்கோ லீமாவில் ஆசிரியர்கள் வேலை இழப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

இவர்களில் ஆசிரியர்கள் இருவர் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளபோதும் பெரு நாடு இதனை மறுத்துள்ளது. ஆசிரியர்களுடன் இணைந்து தீவிரவாதக்குழு ஒன்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக அரசு குற்றம் சாட்டியுள்ளது.

# பக்ரேனில் கடமையாற்றும் அமெரிக்க ஊழியர்கள் இயன்றளவு அங்கிருந்து வெளியேற வேண்டும்

## -அமெரிக்க பாதுகாப்பு நிறுவனம் எச்சரிக்கை

பக்ரேனில் கடமையாற்றும் நடுத்தர மற்றும் கடை நிலை அமெரிக்க உழியர்கள் அனைவரும் இயன்றளவு விரைவில் பக்ரேனை விட்டு வெளியேற வேண்டும் என அமெரிக்கப் பாதுகாப்பு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளைகுடா பிராந்தியத்தில் உள்ள அமெரிக்காவினதும் மேற்கு நாடுகளினதும் இலக்குகள் மீது தீவிரவாதிகள் தாக்குதலை நடத்தக் கூடும் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும். இந்நிலையில் அமெரிக்காவின் ஐந்தாவது கடற்படை பக்ரேனில் நிலை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கு முன்னர் விடுக்கப்பட்ட எச்சரிக்கையில் பக்ரேனில் தங்கியுள்ள அமெரிக்கப் பிரஜைகள் அனைவரும் இயன்றளவு அங்கிருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.



பாக்தாத் சிறைற்றன் விடுதிப் பகுதியில் றொக்கற் தாக்குதலிற்கு இலக்காகி எரிந்த வான் ஒன்றின் அருகில் இரு இராணுவவீரர்கள் நிற்கின்றனர்.

## ஈராக்கில் மீண்டும் ஐ.நா.அலுவலகம்; தலைவராக இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர்?

ஈராக்கில் மீண்டும் ஐக்கிய நாடுகள் அலுவலகம் ஒன்று திறக்கப்படவுள்ளது. இந்த அலுவலகத்திற்கு முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சல்மான்ஹைபர் தலைமைதாங்கக் கூடுமென்று ஐக்கிய நாடுகளின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தலைமைப் பதவிக்கென அதிகாரியொருவரை செயலாளர் நாயகம் கொபிஅனான் கடந்த வெள்ளிபன்று தெரிவுசெய்வாரென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் வெளிநாடுகளில் இடம்பெற்ற அவரது பயணம் காரணமாக நியமனம் அறிவிக்கப்படவில்லை. வேறு பல அதிகாரிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்ட போதிலும் ஈராக்கில் நிலவும் மிகமோசமான பாதுகாப்பு நிலையைக் கருத்திற் கொண்டு அவர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளார்கள்.

கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஹைபர் இந்தியாவின் வெளிவிவகார செயலாளராக 1995-1997 வரை கடமையாற்றியுள்ளதுடன் பிரிட்டனின் இந்தியத் தூதுவராகவும் அவர் இருந்துள்ளார்.



றொக்கற் தாக்குதலைத் தொடர்ந்து பாக்தாத்தில் சிறைற்றன் வீடுதிப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் அமெரிக்க இராணுவத்தினர் ஒருவர் ஈடுபட்டிக்கிறார்.

### பாகிஸ்தானியர் மூவரும் விடுதலை

ஈராக் தீவிரவாதிகளால் பிணைக்கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட பாகிஸ்தானியர்கள் மூவரையும், தீவிரவாதிகள் விடுதலை செய்துள்ளனர். இவர்களைத தொலைக்காட்சி மூலம் பார்த்த சாரதிகளின் உறவினர்கள், தீவிரவாதிகளிடம் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தனர். இதனையடுத்து சாரதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகப் பாகிஸ்தானில் உறவினர்கள் கூறியுள்ளனர்.



கம்போடிய அரசர் நொறோடம் சியாநொக்

# மன்னாரில் பெற்றோலியவள ஆய்வு

# யூலை மாத நடுப்பகுதியில் ஆரம்பம்

## -சிறிலங்கா அரசு தீவிர முயற்சி

(மன்னார்)

**மன்னாரில் பெற்றோலிய ஆய்வுப்பணிகளை விரைவில் ஆரம்பிக்க சிறிலங்கா அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இப்பணிகள் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.**

இப் பகுதியில் பெற்றோலியம் அதிகளவில் இருப்பதாக நம்பப் படும் நிலையில் ஆய்வுப்பணி களை மேற்கொள்ள அரசு நடவ டிக்கை மேற்கொண்டுள்ளது.

மன்னார் 2ஆம் கட்டை, பேசாலை ஆகிய பகுதிகளில் 1970 ஆண்டு அப்போதைய சிறி லங்கா அரசு பெற்றோலிய ஆய் வினை மேற்கொண்டிருந்தது. அவ் ஆய்வின் போது சரியான இடத் தினைத் தெரிவுசெய்து ஆய்வு செய்யாததன் காரணத்தினால் இந்த ஆய்வு தோல்வியடைந்தது.

தற்சமயம் முன்னைய அனுப வங்களை வைத்து மேலும் இவ் விடயங்களில் முக்கியமாக மன் னார் குடாக்கடற்கரை படுக்கை என அழைக்கப்படும் இடத்தில் கூடுதலான அளவில் பெற்றோலிய வளம் இருப்பதாக அறிந்தே இவ் ஆய்வு நடவடிக்கையினை யூலை 15ஆம் திகதி முதல் 2006ஆம் ஆண்டுவரை மேற்கொள்ள சிறி லங்காவின் மின்சக்தி எரிபொருள் அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற் கென 15 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தினை ஒதுக்கீடு செய்துள்ளது. (மி)

### அரும்புகள் பயிலரங்க ஆரம்ப விழா

(அலுவலக செய்தியாளர்)

அரும்புகள் பயிலரங்கம் தொடக்க விழா எதிர்வரும் 6 ஆம் திகதியன்று பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி இளையோர் செயற் பாட்டு நிறுவனத்தில் இடம் பெற வுள்ளது. அன்றைய தினம் உதை பந்து, ஆங்கிலம், அறிவுத்திறன், வலுவூட்டல் அரும்புகள் பயிலரங் கத்தில் ஆரம்பித்து வைக்கப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)



கிளி. கரைச்சிக் கோட்டத்தில் முதற் தடவையாக இடம் பெற்ற ஆரம்பக் கல்வி கற்பித்தல் உபகரணக் கண்காட்சி அண்மையில் பாரதி வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதனை ஆசிரிய ஆலோசகர் விஜய நாதன் பார்வையிடுகிறார். (படம். சோதி)

## புதுக்குடியிருப்பு~கேப்பாப்புலவு வீதியில் கழிவுப்பொருட்களால் துர்நாற்றம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு கேப்பாப்புலவு வீதியில் புதுக்குடியிருப்பு பகுதிக்கு உட்பட்ட மக்கள் குடியிருப்புக்களுக்கு மிகவும் அண்மையாக வீதி ஓரங்களில் கழிவுப்பொருட்கள் கொட்டுவதால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அத்துடன் சுகாதார சீர்கேடாகவுள்ளது.

எனவே முதலில் இவ்வாறான கழிவுப்பொருட்களை வீதி ஓரங் களில் கொட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (08)

## கிளி.மாவட்ட வைத்தியசாலையில் இருதய/மனநோய் சிகிச்சைகள்

### -பெயர்களைப் பதிவு செய்ய வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தி யசாலையில் இருதய வைத்திய நிபுணர்களினால் இருதய நோய்க் கான பரிசோதனைகளும், மன நோய் வைத்திய நிபுணர்களினால் மனநோய்க்கான சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட நோயாளர்கள் மாவட்ட வைத்திய சாலையில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும் வண்ணம் வைத்திய கலாநிதி யூடிரமேஸ் ஜெயக்குமார் வேண்டியுள்ளார்.

கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டின் பேரில் மேற் படி வைத்திய நிபுணர்கள் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு வருகை தந்து சிகிச்சைகள் மேற்கொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## -கிளி. மத்திய கல்லூரியில்- மாணவ,மாணவிகளை ஒருங்கிணைத்து பாண்ட் வாத்திய அணி உருவாக்கம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மத்திய கல்லூரி யில் மாணவ, மாணவிகளை ஒருங்



கிணைத்து பாண்ட் வாத்திய அணி உருவாக்கப் பெற்றுள்ளது. இவ் பாண்ட் வாத்திய அணியின் அரங் கேற்றம் வியாழனன்று கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. முன் னதாக இந்நிகழ்வை ஆரம்பிக்கும் முகமாக கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து அணி தயாராகி அணி வகுத்து கல்லூரி மைதா னத்தை சென்றடைந்ததும் அங்கு அரங்கேற்றம் நடைபெற்றது.

இவ் அரங்கேற்ற நிகழ்வை ஆரம்பிக்கும் முகமாக பொதுச் சுடரினை கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி சிவானந் தனும், பாடசாலை அபி விருத்திச்சங்க செயலா ளரும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை சாள்ஸ் அன்ரனி படைய பிரிவு நிர்வாகப் பொறுப்பாளர் காண் டீபன் ஏற்றினார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் ராஜ குலசிங்கம் இந்நிகழ் வுக்கு தலைமை தாங் கினார். கிளிநொச்சி மாவட்டத்தின் பொதுவான நிகழ்வுகளை தரம்பட நடாத்தும் நோக்குடனும் பாட சாலையின் தரத்தை நிலைப்படுத் தும் நோக்குடனும் அக்கல்லூரி அதிபர், ஆசிரியர்களின் நீண்டகால கடும் முயற்சியின் பயனாக ஒழுங்கமைக்கப்பட்ட இவ் பாண்ட் வாத்திய அணிக்கான இசைக்கரு விகளை தமிழீழ மாணவர் அமைப்பினர் அன்பளிப்பாக வழங்கியிருந்ததோடு, அணிக்கான பயிற்சிக்கும் ஒத்துழைப்பு வழங் கியுள்ளனர். இவ்அணிக்கான பயிற் சியினை கல்லூரி ஆசிரியர்களும் பாண்ட் வாத்திய பயிற்றுவிப்பாசி ரியர் சோ.யசோதரனும் இணைந்து வழங்கியிருந்தனர்.

இவ்அணி தொடர்ந்தும் சிறப் பாக செயற்பட வேண்டுமென கிளி நொச்சி வலயக்கல்விப் பணிப்பா ளர் அரியரத்தினம் ஆசியுரை வழங்கினார். (லோ,ச.)

## அம்பாறை படைமுகாம்களில் அமெரிக்க இராணுவம் பயிற்சி

(அம்பாறை)

அமெரிக்க இராணுவம் அம் பாறை மாவட்ட படைமுகாம்களில் வைத்து சிறிலங்கா இராணுவத் திற்கு வதிவிடப்பயிற்சி வழங்கி வருகின்றது. சிவில் உடையில் நின்று பயிற்சி வழங்கும் அமெரிக் கப் படையினரின் இந்த நட வடிக்கை சமாதான நடவடிக்கைக்கு எதிரானதென விசனம் தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் இச்செயலினால் பீதிக்குள்ளாகியும் உள்ளனர்.

## "நீர்ப்" திட்டத்தினூடாக வீதிகள் சில புனரமைப்பு

(மன்னார்)

மன்னாரில் நீண்ட நாட்களாக திருத்தம் செய்யப்படாதிருந்த தள்ளாடி வீதி, வங்காலை வீதி, நானாட்டான் வீதி என்பன "நீர்ப்" திட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்படவுள்ளது.

இதற்கென 193 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பூநகரி, வெள்ளாங்குளம் வீதியை திருத்திய மைப்பதற்கும் இத்திட்டத்தினூடாக 475 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மி)

## சர்வதேச கூட்டுறவாளர்தின விழாவையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றோர்

(அலுவலக செய்தியாளர்)

82 ஆவது கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்ட ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத் தப்பட்ட பேச்சு, கட்டுரைப் போட்டி களில் முதலிடம் பெற்றவர்களுக் கான மாகாண மட்டப் போட்டி களில் மாவட்ட ரீதியாக திரு கோணமலையில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றிய மாண வர்கள் வெற்றியீட்டியதுடன், கிளி/ மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக் கிடையிலான பணியாளர்களுக் கான வினாடி வினாப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட அக்கராயன் ப.நோ.கூ.சங்க பணியாளர்கள் மாகாண மட்ட வினாடி வினாப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கூட்டுறவாளர் தினவிழாவை முன்னிட்டு துணுக்காய் கோட்ட பாடசாலைக ளுக்கிடையிலான போட்டிகளும் அண்மையில் நடைபெற்றிருந்தன. இதில் முதல் மூன்று இடங்க ளையும் பெற்றுக் கொண்டோர் விபரம்:

*கட்டுரை மேல்ப் பிரிவு:-*

ஆ.சுகர்னியா 1 ஆம் இடம் மல்லாவி மத்திய கல்லூரி

பா. நிரஞ்சனா 2 ஆம் இடம் யோகபுரம் மகாவித்தியாலயம்

ப. மதுரா 3 ஆம் இடம் யோகபுரம் ம.வி

*கீழ்ப் பிரிவு:-*

ச.துவாரகா 1 ஆம் இடம் யோகபுரம் ம.வி

மு.துஸ்யந்தி 2 ஆம் இடம் மல்லாவி மத்திய கல்லூரி

ம.திலீபனா 3 ஆம் இடம் ஐயங்கன் குளம் அ.த.க.பா

*பேச்சுப்போட்டி*

*மேல்ப் பிரிவு*

கு.குகன் 1 ஆம் இடம் மல்லாவி மத்திய கல்லூரி

ஆ.சத்தியகலா 2ஆம் இடம் மல்லாவி மத்திய கல்லூரி

சோ.குகேந்திரன் 3 ஆம் இடம் யோகபுரம் மகாவித்தியாலயம்

*கீழ்ப் பிரிவு:-*

ம.திலீபனா 1 ஆம் இடம் ஐயங்கன் குளம் அ.த.க. பாட சாலை

க.சோபனா 2 ஆம் இடம் மல்லாவி மத்திய கல்லூரி

நா.கோபிதாஸ் 3 ஆம் இடம் யோகபுரம் ம.வி

*சித்திரப்போட்டி*

*கீழ்ப் பிரிவு*

வை.ஜெகதீஸ்வரன் 1 ஆம் இடம் யோகபுரம் ம.வி

செ.விஜயதீபன் 2 ஆம் இடம் கோட்டைகட்டிய குளம் அ.த.க.பாடசாலை

ப.அஜந்தன் 3 ஆம் இடம் துணுக்காய் அ.த.க பாடசாலை

*மேல்ப் பிரிவு:-*

தே.மோகன்ராஜ் 1ஆம் இடம் யோகபுரம் ம.வி

ல.டினேஸ்குமார் 2 ஆம் இடம் யோகபுரம் ம.வி

இ.மணிவண்ணன் 3 ஆம் இடம் மல்லாவி மத்திய கல்லூரி

(24,சோ)

## சாரணிய மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

(உடையார்கட்டு)

சாரணிய மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் வைபவம் கடந்த 29ஆம் திகதி மு/குரவில் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் தமிழீழ தேசியக் கொடியினை முல்லை. வலய சாரணிய உதவி ஆணையாளர் ஜெயம் சபாபதி ஏற்றினார். ஆண்களுக்கான சின னத்தினை சாரணிய ஆணையாளர் உரியவிதிப்படி அணிவிக்க, பெண்களுக்கான சின்னத்தினை பாடசாலை சாரணிய பொறுப்பாசிரியர் திருமதி சுகந்தமாலா அணிவித்தார். (19)

# ஹெல உறுமய பிக்குகளுக்கு எதிரான சனாதிபதி சந்திரிகாவின் தாக்குதல்

புத்தர் ஒருநாள் தர்ம போதனை செய்வதற்காக ஒரு கிராமத்துக்குச் சென்றார். அங்கு ஒரு வீட்டில் தர்ம போதனை முடிய தானம் வழங்கினார்கள். புத்தர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அவற்றை அவ்வீட்டுக்காரரின் உறவினருக்குப் பகிர்ந்து கொடுக்குமாறு கூறினார்.

இன்னுமொரு வீட்டுக்கு அவர் தர்மபோதனைக்குச் சென்றார். அந்த வீட்டுக்காரன் அவரை தாறுமாறாகத் திட்டித்தீர்த்தான். அப்போது புத்தர் எதுவும் பேசாது நின்று விட்டுத் திரும்பினார். அப்போது சீடன் ஒருவர் "அந்த வீட்டுக்காரர் இவ்வளவு திட்டியும் நீங்கள் எதுவும் பேசவில்லையே ஏன்?" என்று கேட்டார். அதற்குப் புத்தர் " முதல் வீட்டில் தானம் தந்தார்கள் அதனை நான் ஏற்கவில்லை. அது அவர்களுக்கே போய்ச் சேர்ந்தது. இந்த வீட்டில் திட்டினார்கள் அதனையும் நான் ஏற்கவில்லை. அதற்கும் அதே கதிதான்" என்று கூறினார்.



இவ்வாறான கதையொன்றை முன்னாள் சனாதிபதி ரணசிங்க பிரேமதாச அடிக்கடி கூறிவந்தார். ஏனெனில சிறிலங்காவில் உயர்பதவி வகித்தோரில் மிகமோசமாகத் திட்டு வாங்கிய அவர் கொடூரத்தின் மறு உருவமாக அவர் சிறிலங்காவில் வர்ணிக்கப்பட்டார். அதனால் இக்கதையைக் கூறிவந்தார்.

அவர் இன்னுமொன்றையும் இறுதிக்காலத்தில் கூறிவந்தார். அதாவது " என்னைக் கொன்றாலும் எனது நற்பெயரைக் கொல்லாதீர்கள்" என்பதே அது, ஆனால் இறுதியில் அவரது நற்பெயர் கொல்லப்பட்டது.

இப்பொழுது தர்ம உபதேசம் செய்யும் பிக்குகளுக்கு பிரேமதாசாவின் கதி ஏற்படுமோ என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது போலத் தெரிகிறது. ஏனெனில் அவர்களைக் கொல்லாவிட்டாலும் அவர்களின் " நற்பெயரைக்" கொல்லும் பணியில் ஆளும் கட்சியினர் இப்பொழுது இறங்கியுள்ளனர். இதிலே இப்பொழுது பௌத்த சிங்களக்குடியரசின் அதியுயர் தலைவரும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட வருமான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இறங்கியுள்ளார்.

பௌத்தத்தையும் சிங்களத்தையும் காப்பாற்றவென்று பாராளுமன்றத்திற்குச் சென்ற பிக்குகள் அதற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றனர் என்பது அவரின் குற்றச்சாட்டாகும். அத்துடன் பாராளுமன்றத்தில் குழப்பம் விளைவிப்பவர்களும் அவர்களே என்பதும் அவரது மற்றொரு குற்றச்சாட்டாகும்.

பாராளுமன்றத் தேர்தலிலே பிக்குகள் குதிப்பது என்ற தீர்மானம் ஜாதிக ஹெல உறுமயவினால் அறிவிக்கப்பட்டது முதல் பௌத்த பிக்குகள் மீது உள, உடல் ரீதியான தாக்குதல்களை ஆரம்பித்த்வர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பி.யினர். இதற்கு அவர்கள் அதே பிக்குகளின் உதவியுடன் விதைத்த இனவாத விதையின் அறுவடையை முழுமையாகத் தாமே பெறும் பேராசை காரணமாக அமைந்தது. அதாவது பிக்குகளை அவர்கள் விதைப்புக்கு மட்டும் பயன்படுத்த நினைத்திருந்த போது அறுவடையில் பங்கு கேட்டது மிகுந்த ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

இதன் காரணமாகத் தேர்தல் பிரச்சார காலத்தில் ஜே.வி.பி.யின் பிரதான எதிரியாக ஐக்கியதேசிய முன்னணியினரை விட ஹெல உறுமயக்காரரே பார்க்கப்பட்டனர். பின்னரும் அதேகதை தொடர்ந்த பாராளுமன்றத் தாக்குதல் சம்பவம் வரை நீடித்தது.

ஆனால் பாராளுமன்றத்தில் சிறுபான்மை அதிகாரத்துடன்-உண்மையில் சனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தின் பலத்துடன்-மூன்று மாதங்களைக் கழித்து விட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எவ்வாறாயினும் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இதற்கு மற்றெந்தக்கட்சியை விடவும் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெறுவதே சிறந்தது என்பது அதற்குத் தெரியும். ஏனெனில் ஐக்கிய தேசியக்கட்சியை தவிர்த்துப் பார்த்தால் மற்ற ஒரேயொரு சிங்களக்கட்சி அதுதான்.

ஏனைய சிறுபான்மை இனக்கட்சிகளை இன்றைய நிலையில் இணைத்துக்கொள்வது பேச்சுவார்த்தைக்குச் செல்லுகையில் மேலும் பல சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும். இதேவேளை தற்போது தனது பெரும்பான்மையை நிரூபிக்க ஜாதிகஹெல உறுமய வைத்திருக்கும் ஆசனங்கள் ஐ.ம.சு.முன்னணிக்கு போதுமானதாகும். அவ்வாறான நிலையில் அண்மைக்காலமாக ஜாதிகஹெல உறுமயவுடன் இணக்கமான போக்கைக் கடைப்பிடிப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

அதாவது ஊடகத்துறையை அமைச்சர் மங்கள சமரவீர பொறுப்பேற்ற பின் ஐக்கிய தேசியக் கட்சியை தவிர ஏனைய கட்சிகள் மீது ஊடகங்கள் ஊடான தாக்குதலை நடத்துவதில்லை என்ற அறிவிப்பு வெளிவந்தது. ஜாதிகஹெல உறுமய தம்மீது அரச ஊடகங்கள் அபகீர்த்திப் பிரச்சாரம் செய்வதாக குற்றம் சாட்டிவந்த நிலையில் மங்கள சமவீரவின் அறிவிப்பு அதற்குச் சார்பானதாக இருந்தது.

இதேவேளை நிதியமைச்சர் சரத் அமுனுகம அண்மையில் ஜாதிகஹெல உறுமயவினரை சந்தித்து பாராளுமன்றச் சம்பவத்திற்கு மன்னிப்புக் கோரியமையும் தமது ஆட்சியின் பெரும் பான்மையை நிருபிக்க உதவுமாறு கோரியமையும் ஜாதிகஹெல உறுமயவை அணைத்துக்கொள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்த ஒரு நகர்வு என்றே கொள்ளத்தக்கதாக இருந்தது. அத்துடன் மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது தொடர்பாக ஜாதிகஹெல உறுமய சம்மதித்திருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.


ஆனால், பிக்குகளை தாக்கியதான குற்றச்சாட்டு ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, ஜீவன்குமாரதுங்க ஆகிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது இருந்த போதும் ஜாதிகஹெல உறுமயவின் கோபம் ஜே.வி.பி மீது இருந்தமை இந்த இணக்கப்பாட்டுக்கு தடையாக அமையுமா? என்ற கேள்வியும் விமர்சகர்களிடையே இருந்தது.

ஜே.வி.பியினர் தாம் ஆட்சியின் பங்காளிகளல்ல. ஆட்சியாளரே தாம் தான் என்று இறுமாப்புக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் சு.க.வினர் மன்னிப்புக் கேட்டாலும் ஜே.வி.பியினர் பிக்குகளுடன் இணங்கிப் போவார்களா? என்ற சந்தேகமே இதற்குக் காரணமாகும். எனினும் ஒரு இணக்கமான போக்கு சு.க.-ஹெல உறுமய விடையே ஏற்பட்டிருக்கையில் சந்திரிகா குமாரதுங்க திடீரென பிக்குகளைச் சாட வேண்டிய தேவை ஏற்பட்டது ஏன்? என்ற கேள்வி எழுகின்றது.

நேரடியாகப் பார்க்கப்போனால் சரத் அமுனுமகவுடனான சந்திப்பின் போது ஹெல உறுமய விடுத்த கோரிக்கை காரணமாக இருக்கலாம். அதாவது நாளை "பிக்குகளைப் பாதுகாப்போம். அதர்ம வாதத்தை தோற்கடிப்போம்" என்ற தொனிப்பொருளில் களனியில் நடைபெறவுள்ள பிரார்த்தனைக்கு அவர்கள் சரத்அமுனுகமவிற்கு அழைப்பு விடுத்தனர். அத்துடன் அரசின் எதிர்கால நடவடிக்கைகளைப் பொறுத்தே தாம் ஆதரவு வழங்கப்போவதாகவும் தெரிவித்திருந்தனர்.

இவ்விடயம் சந்திரிகா அம்மையாரைச் சீண்டிவிட்டதன் காரணமாக அவர் இவ்வளவு காலமும் பிக்குகள் தொடர்பாகச் சாதித்து வந்த மௌனத்தைக் கலைத்திருக்கலாம். எனக்கருதலாம் அல்லது ஜாதிகஹெல உறுமயவை அப்படியே இணைத்துக்கொள்வதை விட அதனைத் துண்டாக உடைத்து அதன் பலத்தைச் சிதைத்து பகுதி பகுதியாக வைத்துக்கொள்ளும் .திட்டத்தை சந்திரிகா வகுத்திருக்கலாம். ஏனெனில் ஏற்கனவே இரண்டு பிக்குகளை அவர் பிரித்தெடுத்திருக்கிறார். மேலும் ஒரு அதிருப்தியாளர் குழு ஜாதிகஹெல உறுமயவிலிருந்து வெளித்தெரிவதும் இதற்கான அறிகுறியாகவே தென்படுகின்றது.

இவ்வாறே அவர் ரவூப்ஹக்கீமையும் தனிமைப்படுத்தும் முயற்சியிலேயே குமாரிகூரே விவகாரமும் எழுப்பப்பட்டது. அவ்வாறு தான் சந்திரிகா திட்டமிட்டிருப்பாராக இருந்தால். இதன் முதற்பகுதியிலேயே கூறப்பட்ட இருவிடயங்களில் ஒன்றுக்கு பிக்குகள் தயாராக வேண்டியிருக்கும். அதாவது புத்தர் கூறியது போல "வசவும் தானமும் உமக்கே சேரும்" என மௌனம் சாதிக்கவேண்டும் என வழங்கு பவரை நோக்கி கைகாட்டி விட வேண்டும். அல்லது "என்னைக் கொல் லுங்கள் எனது நற்பெயரைக் கொல்லாதீர்கள்" எனக் கெஞ்ச வேண்டும்.



ஏனெனில் சந்திரிகா ஆரம்பித்து வைத்துள்ள "பௌத்த தர்மத்திற்கு அபகீர்த்தி" ஏற்படுத்துவதான பிரச்சாரம் தொடரக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு.

சந்திரிகாவின் முதலாவது பேச்சுக்கு ஜாதிகஹெல உறுமய பதிலளித்துள்ளது. எனவே புத்தரின் வழியில் அது செல்லத்தயாராக இல்லை என்பது வெளிப்பட்டுள்ளது. ஏனெனில் அரசியலில் இறங்கிவிட்டு இவ்வாறான உரைகளுக்கு பதிலளிக்காது விடவும் முடியாது.

எனவே சந்திரிகாவின் பாணியில் பிக்குகளுக்கு எதிரான பிரச்சாரம் தொடருமாயின் நற்பெயரைக் காப்பாற்ற பிக்குமார் பெரும் பாடுபடவேண்டியே இருக்கும். விளைவு யாருக்குச் சாதகமாக அமையும்? நிச்சயமாக ஐக்கிய தேசிய முன்னணிக்கே சாதகமாக அமையும் எனத்துணிந்து கூறலாம்.

**வேலவன்**

# விடுதலைப் போராட்டத்தில் பாரிய மாற்றங்களை கருப்புலிகளின் தியாகம் ஏற்படுத்தியிருக்கிறது

## -தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா

(அலுவலக செய்தியாளர்)

கரும்புலிகளின் தியாகம், தற்கொடை என்பன எமது தாயக விடுதலைப் போராட்டத்தில் பெரும் தடைக்கற்களை உடைத்தெறிந்து அள்விட முடியாத பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வாறு தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு பொதுவிளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான [illegible]ரும்புலிக[illegible] நாள் பெருவிளை[illegible]ட்டுப்போட்டியை ஆரம்பித்துவைத்து உரைநிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கரும்புலிகளின் எண்ணம், சிந்தனைகள் அனைத்தும் எமது மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்பதேதான். இதற்காகக் கடலில் கடற்கரும் புலிகளாகவும், தரையில் தரைக் கரும் புலிகளாகவும் வெடிகுண்டுடன் எதிரிமீது பாய்ந்து வெடித்துச் சிதறி, தமது உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள். இத்தகைய பரந்தமனம் படைத்த தியாக வீரர்களை எமது மக்கள் தமது ஆழ்ந்த மனதில் வைத்து பூசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கரும்புலிகளின் ஈகத்தின் பிரதிபலிப்பாகவே தான் இன்று நாம் அனைவரும் இந்த இடத்தில் கூடியிருக்கிறோம். இந்த அடிப்படையில் இன்று நடைபெறுகின்ற போட்டிகள் ஒரு கன்னி முயற்சியாகும். எனவே இனிவரும் காலங்களில் தமிழீழத்தில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி மிகப் பிரமாண்டமான அளவில் இந்த விளையாட்டுப் போட்டி நடத்தப்படும்.

எமது தேசத்தில் இருந்து மறைந்து போய்க்கொண்டிருக்கும் மல்யுத்தம், குத்துச்சண்டை போன்ற கலைகளை எல்லாம் இந்தப் போட்டியில் இணைத்திருக்கின்றமை ஒரு சிறந்த அம்சமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(லோ,ச)

# தமிழக அரசியலில் திரையுலக ஆதிக்கம்

அ.கலைவாணி


"மணி ஓசை வரும் முன்னே, ஆனை வரும் பின்னே" என்பது போல் 2006 இல் நடைபெறவுள்ள தமிழக சட்டமன்றத் தேர்தலையும், எதிர்கால முதலமைச்சர் பதவியையும் குறிவைத்து தமிழகத்தில் பலபரீட்சை ஆரம்பமாகியுள்ளது.

தமிழக அரசியல் கட்சிகளுடன் திரைப்பட நடிகர்களும், 2006 சட்டமன்றத் தேர்தலில் களம் இறங்க இப்பொழுதே தயாராகியுள்ளனர்.

அந்தவகையில் தற்போது நடிகர் விஜயகாந்த் தனது அரசியல் பிரவேசத்திற்கு பூஜை போட்டுள்ளார். இதன் முதல் கட்டம் தான் புதிய கட்சி தொடங்கவுள்ளதாக அவரது அறிவிப்பு.

தமிழகத்தில் திரைப்படத் துறையைச் சார்ந்தவர்கள் காலம் காலமாகவும் அரசியலில் இறங்குவது வழமை. பலர் காணாமல் போயுள்ளனர். சிலர் இன்றும் கோலோச்சிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த வகையில் மறைந்த பழைய கால நடிகர்களான எஸ்.எஸ்.ராஜேந்திரன், சிவாஜி கணேசன் ஆகியோர் திரைப்படத் துறையிலிருந்து அரசியலுக்கு வந்தவர்கள் தான்! ஆனால் திரைப்படத்துறை போல் அரசியலில் அவர்களால் சாதிக்க முடியவில்லை.


எம்.ஜி.ஆர். கருணாநிதி ஜெயலலிதா சரத்குமார்


சிவாஜி ராஜேந்தர் ராஜனிகாந்த்

ஆனால் மறைந்த அறிஞர்அண்ணா, எம்.ஜி.ராமச்சந்திரன் போன்றோர் மட்டும்தான் திரைப்படத்துறையிலிருந்து அரசியலுக்கு வந்து கொடிகட்டிப் பறந்தவர்கள். இவர்களுடன் இன்றும் தி.மு.க.தலைவராக இருக்கும் கருணாநிதியும் உள்ளடங்குகின்றார்.

இதேபோல் இன்றைய தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும், முன்னாள் நடிகை தான். ஆனால் நடிகை என்ற பெயருடன் அவர் அரசியலில் கால் பதித்துள்ள போதிலும் எம். ஜி. ராமச்சந்திரனின் அரசியல் வாரிசாக தன்னை நிலை நிறுத்தியதால் தான் முதன்மை பெற்றார்.

இன்றும் எம்.ஜி. ராமச்சந்திரனின் பெயரை சொல்லிக் கொண்டுதான் தமிழக முதலமைச்சர் கதிரையில் குந்திக் கொண்டிருக்கின்றார்.

இதேபோல் ரி.ராஜேந்தர்,கே.பாக்கியராஜ், ராதாரவி,ராமராஜன், எஸ்.வி.சேகர் ஆகியோரும் அரசியலின் ஆழம் தெரியாது காலை விட்டதனால் அதில் காணாமல் போய்விட்டனா.

ஆனால் நெப்போலியன், சரத்குமார் இருவரும் அரசியலில் இன்று அமைச்சர்களாக இருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே திரைப்படத் துறையிலிருந்து அரசியலுக்கு வருபவர்களில் அனேகரால் நிலைக்க முடிவதில்லை என்றுதான் தமிழக அரசியல் சொல்கின்றது.

ஏனெனில் திரைப்பட துறையில் ஜொலிப்பது வேறு. அரசியல் சதுரங்கம் வேறு. ரசிகர்களெல்லாம் முழு மக்கள் தொகைக்கு ஈடாகமாட்டார்கள்.

இதனை புரிந்து கொண்டவர்கள் தான் அரசியலில் காலம் கழிக்க முடியுமே தவிர, ஏனையவர்களின் கதி "எல்லோரும் ஏறிய குதிரையில் சக்கடத்தார் ஏறிச் சறுக்கி விழுந்த கதைதான்".

இந்தவகையில் தமிழகத்தில் 2006 சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரங்களைத் தான் தற்போது அங்கு காணமுடிகின்றது.

இந்த வகையில் தமிழக முதலமைச்சர் பதவியில் நடிகர் விஜயகாந்த் கண் வைத்துள்ளார் போல் தெரிகிறது. தனது ரசிகர்களை திரட்டுவதன் மூலம் புதிய கட்சியமைப்பது இவரது திட்டம்.

அதற்கான வழிவகைகளை அவர் முடுக்கிவிட்டுள்ளார். ஆனால் அவையாவும் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் தமிழகத்தில் உருவாக்கியுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்களும், விஜயகாந்த் ரசிகர்களும் அடிதடியில் இறங்கியுள்ளனர். அத்துடன் இன்றும் இரு தரப்பும் அடிதடி, தீவைப்பு, என்பனவற்றை நிறுத்துவதாக தெரியவரவில்லை.

இதற்கு காரணம் இல்லாமலில்லை அண்மையில் ரசிகர் ஒருவரின் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட நடிகர் விஜயகாந்த். திரைப்படத்தில் வசனம் பேசுவது போல அரசியல் வசனம் பேசியுள்ளார்.

நடிகர்கள் அரசியலுக்கு ஏன் வரக்கூடாது ...? அப்படி கூறுபவர்கள் முட்டாளாகத்தான் இருக்க முடியும். அமெரிக்காவில் நடிகரான றீகன் ஜனாதிபதி ஆகவில்லையா...?, ஏன் தமிழகத்தில் எம்ஜி. ராமச்சந்திரன் முதலமைச்சராகவில்லையா..? என்று வினா எழுப்பினார்.

அத்துடன் தமிழக மக்களுக்கு உதவி செய்து வரும் தான் அரசியலுக்கு ஏன் வரக்கூடாது? எனக் கேள்வி எழுப்பி தனது அடிமன ஆசையை வெளிக் கொட்டியும் உள்ளார்.

இத்துடன் தனது புகழுரையை நிறுத்தியிருந்தால் சிக்கல்கள் இன்று உருவாகி இருக்க மாட்டாது.

ஆனால் மக்கள் முன்வராதவர்களெல்லாம் அமைச்சர்களாகியுள்ளனர் என்று பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் ராமதாஸின் மகன் அன்புமணியை சாடியுள்ளார்.

அதுமட்டுமன்றி (தி.மு.க. கருணாநிதி) கலைஞர் தமிழக மக்களுக்குச் சேவை செய்ய நினைத்திருந்தால், தமிழக மக்கள் நீர் பற்றாக்குறையால் வாடுவதால் அது தொடர்பான அமைச்சை பெற்றிருக்க வேண்டும் ஆனால் அவர் அவ்வாறு செயற்படாது ஏன்... என்று வினா எழுப்பி கருணாநிதி மீது சொல்லடி கொடுத்துள்ளார்.

நடந்து முடிந்துள்ள மக்களவைத் தேர்தலில் 40 தொகுதிகளையும் தி.மு.க. தலைமையில் கூட்டணிகள் கைவசப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் தி.மு.க. மீதும் அதன் கூட்டணிக்கட்சிகள் மீதும் நடிகர் ஒருவர் சொற்போர் தொடுப்பது, பெரும் சர்ச்சைகளை உருவாக்காமல் இருக்க முடியாது.

அதுதான் தற்போது தமிழகத்தில் நடந்தேறிக் கொண்டிருக்கின்றது.

விஜயகாந்தின் கட்அவுட் எங்கெல்லாம் இருக்கின்றதோ அங்கெல்லாம் பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கின்றனர்.

விஜயகாந்த் மிகவும் நம்பிக்கை கொண்டிருக்கும் " கஜேந்திரா" திரைப் படத்தை தமிழக தியேட்டர்களில் திரையிடக் கூடாது திரையிடப்பட்டால் திரையரங்கு கொழுத்தப்படும் ஏன்பது அவர்களது எச்சரிக்கை.

ஏற்கனவே அரசியலுக்கு வராமல் அடிவாங்கிய நடிகர் ரஜனிகாந்த். அரசியலுக்குள் வராமல் வெளியிலிருந்து குரல் கொடுத்ததனால் தான் "எல்லாம் ஆண்டவன் செயல்" என்று மேல் பூச்சாக அவரால் இப்போது கூற முடிகின்றது.

"தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்" என்பது போல ரஜனிகாந்த் அரசியலை விட்டோடிக் கொண்டிருப்பதாக விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

இந்நிலையில் நடிகர் விஜயகாந்த் அரசியல் தனக்கு வெறும் சுண்டக்காய்போல் சாதாரண விடயம் என்று குரல் கொடுப்பது எவ்வளவு தூரம் வெற்றியைத் தேடிக் கொடுக்கும்.... என்பது மிகுந்த சந்தேகத்தை எழுப்பாமல் இல்லை.

அதுமட்டுமன்றி நடிகர் ரஜனிகாந்த் போல் அரசியலுக்கு வருவதாக குரல் கொடுப்பதுடன் நின்றுவிடமாட்டேன் என்று சக நடிகர் ரஜனிகாந்தை மட்டுமன்றி ஏனைய நடிகர்களுடனும் சர்ச்சைகளையும் உருவாக்கியுள்ளார்.

எனது இலக்கு 2006 சட்டமன்றத் தேர்தல் தான் என்று சவால் விடுத்துள்ளமை அவரது நம்பிக்கையைக் காட்டுகின்றதா...... அல்லது தனது ரசிகர்கள் மட்டுமே தமிழக மக்கள்எனும் அவரது தப்புக்கணக்கைக் காட்டுகிறதா...... எனும் சந்தேகம் தோன்றாமலில்லை.

ஏனெனில் அன்று பட்டி தொட்டியெல்லாம்எம்.ஜி. ராமச்சந்திரனுக்கு நிகராக ஜொலித்தவர் சிவாஜிகணேசன். 1989இல் சட்டமன்றத் தேர்தலில் தனது சொந்த மாவட்டமான தஞ்சையில் திருவையாறு எனும் தொகுதியில் அ.தி.மு.க. ஜானகி அணியில் போட்டியிட்டார். ஆனால் பிரகாசிக்கதான் முடியவில்லை. இதேபோல் திரையுலகில் சுப்பர்ஸ்ரார் என்னும் நிலைவரை


வைகோ ஸ்டாலின்

உயர்ந்தவர் நடிகர் ரஜனிகாந்த். ஆனால் அவரால் கூட அரசியலுக்குள் கால்பதிக்க முடியவில்லை.

இந்த நிலையில் நடிகர் விஜயகாந்தின் அரசியல் பிரவேசம் மட்டும் பிரகாசிக்கவா பொகின்றது எனும் வினா எழுவது தவிர்க்க முடியவில்லை.

ஆனால் நடிகர் விஜயகாந்திற்கு ஏதாவது ஒரு கட்சியின் பின்புலம் இல்லாது இவ்வாறு குரல் கொடுப்பது இயலாத. காரியம் எனும்கருத்தொன்றும் இல்லாமலில்லை.

அதாவது தி.மு.க., பா.ம.க. என்பவற்றை விமர்சிப்பதனால் விஜயகாந்தின் பின்னே அ.தி.மு.க. இருக்கக் கூடும் எனும் சந்தேகமும் இருக்கின்றது.

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் இணைந்து நடிகர்கள் ரஜனிகாந்த், விஜயகாந்த் போட்டியிடவுள்ளனர் எனும் ஊகமும் இல்லாமலில்லை.

ஆனால் அ.தி.மு.க.வுடன் இணைந்தால் நடிகர் விஜயகாந்தின் முதலமைச்சர் கனவு


விஜயகாந்த்

கலைந்துபோகும் என்று நம்பமுடியும்.

என்றாலும் மக்கள் முன் கொள்கைகள் எதுவும் வைக்காமல் திரைப்படத்துறை செல்வாக்குடன் மட்டும் அரசியலில் வெற்றி பெறுவது மிகவும் இலகுவானதல்ல.

ஆனால், மக்களுக்கு சேவை செய்வதாகக் கூறிக்கொண்டு அரசியலுக்கு வருபவர்கள் பதவிக் கதிரையில் அமர்ந்தவுடன் மக்களை மறந்து சுயநலத்தில் இறங்கியும் விடுகின்றனர்.

எனவே நடிகர் விஜயகாந்தின் அரசியல் பிரவேசம் மக்களுக்கு எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதேவேளை என்னுடைய இலட்சியம் 2006 சட்டமன்றத் தேர்தல்தான் என்று ம.தி.மு.க.வைகோ கூறியிருக்கின்றார்.

அது மட்டுமன்றி மக்களவைத் தேர்தலில் மு.க. ஸ்டாலின் போட்டியிடாமைக்கு முக்கிய காரணம், 2006 சட்டமன்றத் தேர்தலைக் குறிவைத்துத் தான் என்றும் எதிர்பார்ப்பு இருந்து வருகின்றது.

எனவே மக்களவையில் வரலாறு காணாத வெற்றியை தி.மு.க. கூட்டணி பெற்றிருக்கையில், சட்டமன்றத் தேர்தலுக்கு இக்கூட்டணி முழு வெற்றிக்காக அனைத்து முயற்சிகளையும் எடுக்கத் தவறமாட்டாது.

இதேவேளை தமிழக மக்கள் நடிகர் ரஜனிகாந்தை முக்காடுபோட்டு மூலையில் இருத்தியுள்ளனர்.

ஆனால் தமிழக மக்கள் நடிகர் ரஜனி காந்திற்கு கொடுத்த அடியை பாட்டாளி மக்கள் கட்சியோ தாங்களே நடிகர் ரஜனிகாந்தை அரசியலில் இருந்து ஓரம்கட்டி மூலையில் முக்காடு போட்டு இருத்தியதாக மார்தட்டுகின்றது.

அதனால்தான், நடிகர் ரஜனிகாந்த் போல் நடிகர் விஜயகாந்தையும் முளையிலேயே கிளளி எறியும் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளதாக விமர்சனம் எழுந்திருக்கின்றது.

ஆனால் நடிகர் விஜயகாந்த் திரைப்பட சங்கத் தலைவராக இருப்பதோடு, மக்களுக்கு ஆங்காங்கே உதவிகளும் செய்து வருகின்றவர் என்பதை மறுக்க முடியாது.

எனவே நடிகர் விஜயகாந்த் தனது கஜேந்திரா படத்தை வெற்றிபெறச் செய்வதன் மூலம் தனது அரசியல் பிரவேசத்திற்கு வலுவான அத்திவாரம் ஏற்படுத்துவாரா... என்பதே இன்று தமிழகத்தில் ஓங்கி ஒலிக்கும் வினாவாகும்.


♥ ♥ ♥

"வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்ற தமிழ் முது மொழிக்குப் பொருத்தமாக பெரியளவில் ஒரு உதாரணத்தை சொல்வதானால் அமெரிக்காவின் போக்கைக் குறிப்பிடலாம்.


தான் எடுக்கின்ற தீர்மானங்களை தன்னிச்சையாக நடைமுறைப்படுத்தி விட்டு அந்த முடிவுகளுக்கு நியாயம் கற்பிக்கின்ற போக்கில் செயற்பட்டு ஏனைய நாடுகளையும் தனது முடிவிற்கு "ஆமா" போடவைக்கின்ற கைங்கரியம் அமெரிக்காவிற்கே உரிய தனிச்சிறப்பு என்பது பலரது விமர்சனம்.

இந்த நிலையினையே ஈராக் விடயத்திலும் அமெரிக்கா காட்டியிருக்கிறது என்பது நன்றாகவே தெரிகிறது.

அரபுலகின் தனித்துவச் சண்டியனாக இருந்து வந்த ஈராக்கின் நிலையானது அமெரிக்காவுக்கு சவாலாகவே இருந்து வந்தது. இந்த நிலை நீடித்தால் தனது உலக



# சதாமை இஸ்லாமிய விரோதியாக சித்திரிக்கும் குற்றச்சாட்டுகள்



பொலிஸ்காரன் என்ற பட்டத்தை இழக்க வேண்டி ஏற்படும் என்று கருதிய அமெரிக்கா ஈராக்கை பலவீனப்படுத்த பலவழிகளிலும் முயற்சித்து வந்தது. இந்தக் கட்டத்தில் தான் ஈராக் குவைத் நாட்டை ஆக்கிரமித்தது.

எப்போது ஈராக் மீது தனது பலத்தை காட்டலாம் என்று தருணம் பார்த்திருந்த அமெரிக்காவிற்கு இவ்விடயம் "பழம் நழுவி பாலில் விழுந்தது" போல் ஆயிற்று உடனடியாகவே குவைத் நாட்டை காப்பாற்றுவது என்ற போர்வையில் ஈராக்கின் தனித்துவத்தை சிதைத்துவிட அமெரிக்கா முயன்று ஈராக்குடன் மோதியது இது பழம் கதை.

இந்த நிலையிலும் ஈராக் அடிபணிந்து போகாத நிலையில் அமெரிக்காவை மேவிச் செயற்பட்டதானது. அமெரிக்காவிற்கு கௌரவ குறைவாகவே இருந்தது. இந்த நிலையில் தான் ஈராக்கில் எப்படியாவது தனது மேலாண்மையை நிலைநாட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கில், ஈராக் விடயத்தில் தான் தலையிடும்படியான கட்டங்களை உருவாக்குவதற்கு அமெரிக்கா நேரடியாகவே முயன்றது. இவ் விடயத்திற்கு ஐ.நா. சபையினதும், உலக நாடுகளினதும் மௌன ஆதரவு தேவை என்று கருதிய அமெரிக்கா, ஈராக்மீதான பலமான குற்றச்சாட்டை முன்வைக்க தீர்மானித்தது அதுதான். "ஈராக் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை வைத்திருக்கிறது என்ற குற்றச்சாட்டாகும், இந்தக் குற்றச்சாட்டினை ஈராக் மறுத்து வந்த வேளை அமெரிக்கா இக்குற்றச்சாட்டை நிரூபிப்பது என்ற போர்வையில் ஐ.நா. சபைக்கு அழுத்தம் கொடுத்து. தனது மேலாண்மையை ஈராக்மீது திணிக்க முற்பட்டது. மெல்ல மெல்ல ஈராக் உள்விவகாரங்களை நன்கறிந்து கொண்ட அமெரிக்கா ஈராக்கை பலவீனப்படுத்த முடிவெடுத்தது.

21.03.2003 அன்று ஈராக்படை மீதான, படையெடுப்பினை தனது கூட்டு நாட்டுப் படைகளுடன் ஆரம்பித்த அமெரிக்கா விரைவாகவே ஈராக்கைக் கைப்பற்றியது மட்டுமல்ல. சதாம் ஹுசைனையும் கைது செய்தது. இங்கு கவனிக்கவேண்டிய விடயம் என்னவென்றால் அமெரிக்கா ஈராக்மீது படை எடுப்பதற்கு உலகத்திற்கு கூறிய காரணமும் குற்றச்சாட்டும் ஈராக் தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை வைத்திருக்கிறது என்பதாகும்.

ஆனால் அமெரிக்கக் கூட்டுப்படைகள் ஈராக்கைக் கைப்பற்றி ஒரு வருடத்திற்கு மேலாகியும், ஈராக்கில் அமெரிக்கா கூறியது போன்றதான எந்தவித இரசாயன ஆயுதங்களும் கண்டெடுக்கப்படவில்லை. ஆகவே அமெரிக்கா, ஈராக்மீது போர்தொடுக்கக் காரணம் கூறிய குற்றச்சாட்டு என்னாவது என்ற கேள்வி உலகின் மனச்சாட்சிகளில் இருந்து எழவே அமெரிக்கா பந்தை மாற்றி எறிந்தது.

என்னவென்றால், ஈராக் மக்களை சதாம் ஹுசைனிடம் இருந்து தாம் மீட்டு விட்டதான ஒரு தோற்றப் பாட்டை உலகிற்குக் காட்ட அமெரிக்கா முயன்றது. இதற்காக சதாம் ஹுசையினின் அடக்குமுறை ஆட்சியை உலக ஊடகங்களில் தாராளமாகவே தவழவிட்டது. இந்த நிலையில் ஈராக்கிய மக்களின் மன நிலையோ செயற்பாடுகளோ அமெரிக்காவை ஆதரிப்பவையாக இருக்கவில்லை என்பது அமெரிக்காவிற்குப் பெரும் சங்கடத்தை உருவாக்கியது. ஈராக்கியர்களைப் பொறுத்தவரை, பேயைக் கலைத்துவிட்டு பிசாசு வந்துள்ளது என்றுதான் . கருதினார்களே தவிர, அமெரிக்காவின் செயற்பாடுகளை ஆதரிக்கவில்லை.



இப்படிப்பட்ட நிலையில் அமெரிக்காவிற்கு எதிரான ஈராக்கியர்களின் எதிர்ப்பலைகள் பல அமெரிக்கக் கூட்டுப் படைகளின் உயிர்களை காவு கொண்டு வருகிறது.

ஈராக்கை தான் கைப்பற்றி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி வருவதாகக் காட்ட முயன்ற அமெரிக்காவின் போக்கிற்குப் பலத்த அடியாக ஈராக்கியர்களின் எதிர்ப் பலைகள் அமெரிக்கக் கூட்டு அமைப்பிற்கு சங்கடத்தை ஏற்படுத்தியது.

இவற்றையெல்லாம் தவிர்ப்பதனால் அமெரிக்காவிற்கு இருக்கும் ஒரே வழி ஈராக்கைவிட்டு வெளியேறுவது அப்படிச் செய்வதனால் மீண்டும் ஒரு சதாம் ஹுசைனை ஈராக் பெற்றுவிடும் என்பது அமெரிக்காவிற்கு நன்கு தெரியும். ஆகவே ஆழமறியாமல் காலைவிட்டுவிட்டு அவதிப்படும் அமெரிக்காவிற்கு எஞ்சிய இறுதி வழிதான் ஈராக்கியரிடம் ஈராக்கிய ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது என்ற நாடகம். அந்த நாடகமும் அரங்கேறிய கையோடு அமெரிக்காவின் இன்னுமொரு போலி முகத்திரையும் உலகிற்குத் தெரிய வந்துள்ளது.

சதாம்ஹுசைன் இரசாயன அணு ஆயுதங்களை வைத்துள்ளார் என்ற பிரதான குற்றச்சாட்டைச் சுமத்தி ஈராக்கையும், சதாம் ஹுசைனையும் பிடித்த அமெரிக்கா ஈராக் கியர்களிடம் ஈராக்கிய ஆட்சியை ஒப்படைப் பது என்ற தனது கைப்பொம்மை இராட்சியத்தை நிறுவியபின் கைதியாக இருந்த சதாம்ஹுசைனை புதிய ஆட்சியாளர்களிடம் கையளித்து அவரைக் கடந்த 1.7.2004 அன்று நீதிமன்றத்தில் நிறுத்தியமையாகும். அங்கு சதாம் ஹுசைன் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் என்னவென்றால்,

1. 1980-86வரை ஈரானுடன் போரிட்டது.
2. 1983இல் பர்ஷானிகுறுவை சேர்ந்த 5000 உறுப்பினர்களைக் கொலை செய்தமை.
3. 1988இல் இரசாயன தாக்குதல் மூலம் 5000பேரைக் கொன்றமை.
4. 1990 குவைத் ஆக்கிரமிப்பு
5. அமெரிக்காவின் ஆதரவிலான, ஷியா முஸ்லிம்களின் கிளர்ச்சியை அடக்கியமை.

முத்தையனூர்
ப.துஷ்யந்தன்

இங்கே அமெரிக்கா ஈராக்மீது போர் தொடுக்கக் காரணமாக இருந்த குற்றச்சாட்டான இரசாயன ஆயுத விவகாரம் எங்கே போனது?

மற்றையது தற்போது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் தன்மையைப் பார்க்கு மிடத்து ஒன்று தெளிவாகத் தெரிகிறது. சதாம் மீதான விசாரணையின்போது, சதாம் ஒரு முஸ்லிம்களின் எதிரியாகு காட்டப் படவேண்டும் என்பதில் அமெரிக்கா தந்திரமாகத் திட்டம் வகுத்திருக்கிறது தெரிகிறது.

ஏனெனில் சதாம் முஸ்லிம்களை தாக்கினார், அழித்தார் என்பதாகவே குற்றச்சாட்டுக்கள் அமைந்திருக்கின்றனவே தவிர அமெரிக்காவை சதாம் எதிர்த்தார் என்பதான எக்குற்றச்சாட்டும் இல்லை என்பது நோக்கத்தக்கது.

★ ★ ★

# கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை

யாழ்மாவட்டத்தில் கட்டாக் காலி நாய்களை ஒழிப்பதற்கான விஷேட திட்டம் ஒன்றை யாழ். மாவட்ட சுகாதார சேவைப் பிரிவினர் மேற்கொள்ளவுள்ளனர்.

அண்மைக்காலமாக கட்டாக் காலிநாய்களது தாக்கங்களுக்கும், விசர் நாய் கடித்தாக்கங்களுக்கும் இலக்காவோர் தொகை யாழ். குடாநாட்டில் அதிகரித்து வருகிறது.

இதனால் ஏற்பட்டுள்ள அபாய கரமான தாக்கங்களைக் கவனத்தில் கொண்டே இத்திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. இதற்கான விசேட கூட்டம் ஒன்றும் அண்மையில் யாழ்மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவினாரால் நடத்தப்பட்டுள்ளது. (33)

## வீடு தீக்கிரை

தாண்டியடியில் அண்மையில் நடைபெற்ற இரட்டைக் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் வீடு இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. கிறனைட் வீச்சில் கணவனும் மனைவியும் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதான மேற்படி சந்தேகநபர் [illegible]கரைப் பற்றுப் பொ[illegible]ில் தடுத்து வக்கப் பட்டுள்ளன[illegible]றிப்பிடத்தக்கது.

# தென்மராட்சி தெற்கு கடற்பரப்பிலுள்ள படையினரின் முட்கம்பி வேலிகளை அகற்றுக

## -கடற்றொழிலாளர் அமைப்புகள் நிர்ப்பந்தம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்குப்பகுதியிலுள்ள கடற்பரப்பில் படையினரால் அமைக்கப்பட்டுள்ள முட்கம்பி வேலிகள் உடனடியாக அகற்றப் பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்கிலுள்ள மறவன்புலோ, கோகிலாக்கண்டி, தனங்கிளப்புஆகிய பிரதேசங்களிலுள்ள வளம்மிக்க கடற்பரப்புப் பகுதிகளை கடற்படையினர் முட்கம்பி வேலிகளை இட்டு எல்லைப் படுத்தியுள்ளதுடன் அப்பகுதிகளில் சென்று மீன்பிடிக்கவும் தடைவிதித்துள்ளனர்.

இதனால் இப்பகுதிக் கடற்றொழிலாளர்கள் பல்வேறு துன்பங்களையும் அனுபவித்து வருவதுடன் இப்பகுதி கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே இவற்றைக்கருத்தில் கொண்டே மேற்படி கடற்பரப்பில் படையினரால் நிறுவப்பட்டுள்ள பாதுகாப்பு முட்கம்பி வேலிகள் அகற்றப்படல் வேண்டும் என அப் பகுதி கடற்றொழிலாளர் அமைப்புக்கள் கோரியுள்ளன. (33)

# பேயாடிகூழாங்குளம் அ.த.க.வில் ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு

(வவுனியா செய்தியாளர்)


பேயாடி கூழாங்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் இயங்கிவரும் இப்பாடசாலையில் நலன்புரி நிலையத்திலுள்ள ஏறத்தாழ 500 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு அதிபர் உட்பட 5நிரந்தர ஆசிரியர்களே கல்விகற்பிக்கின்றனர். வவுனியாவில் உள்ள அரசசார்பற்ற நிறுவன்ம் ஒன்றினால் நியமிக்கப்பட்டுள்ள 08 ஆசிரியர்கள் இங்கு கற்பிப்பதனாலேயே இப்பாடசாலை இயங்க முடிகின்றது. மூன்று வருடங்களுக்குமேலாக சேவையாற்றும் இவ்ஆசிரியர்களுக்கு இதுவரை தொண்டர் ஆசிரியர்கள் என்ற அனுமதிக்கடிதம் வழங்கப்படாமையால் இவர்களில் சிலர் தமது சேவையை இடைநிறுத்தி உள்ளனர். இதனால் இப் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்கள் மேலும் கஷ்டத்தை எதிர் நோக்குகின்றனர்.

கற்றலுக்குத் தேவையான எந்த ஒரு அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் இயங்கிவரும் இப்பாடசாலையின் ஒவ்வொரு பிரிவுகளிலும் 40 தொடக்கம் 50வரையான மாணவர்கள் கல்விகற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(10)

# றொரன்ரோ தமிழ்க்கலை தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களின் கண்காட்சி




(படம், தகவல் : எழில்)

கனடா றொரன்ரோவில் உள்ள தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களால் கண்காட்சியொன்று நடத்தப்பட்டுள்ளது.

வருடம் தோறும் ஆனிமாதம் நடத்தப்படும் இக்கண்காட்சி இவ்வருடமும் கடந்த 26, 27 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. இதில் ஆண்டு 12 படிக்கும் எமது உறவுகளால் அமைக்கப்பட்ட பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. இவ் இருநாட்களும் இரவு கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

# கரைதுறைப்பற்று ப.நோ.கூ.ச இரு மாடிக் கட்டடம் திறப்பு

வன்னி புனர்வாழ்வுக்குத் துணைபுரியும் அமைச்சின் நிதியிலும், புனர்வாழ்வு அமைச்சின் நிதியிலும் கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கநிதியிலும் கட்டப்பட்ட இரு மாடிக்கட்டடத் தொகுதி திறப்பு கடந்த புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ப.நோ.கூ.ச.தலைவர் தி.சிவபாதம் தலைமையில் ஆரம்பமானது.

பொது ஈகச்சுடரினை தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுப் பகுதி இணைப்பாளர் சாந்தன் ஏற்றினார். மங்கல விளக்கினை பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா, கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் காசிப்பிள்ளையும் ஏற்றினார்கள்.

தமிழீழ தேசியக்கொடியினை கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ரங்கன் ஏற்றினார். பெயர்ப்பலகையினை முல்லை.மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி திரைநீக்கம் செய்தார். கட்டடத் தொகுதிகளை பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினமும், முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமாரும், கிராமிய அபிவிருத்தி வங்கிக்கான கட்டடத்தினை கூட்டுறவு. அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.மோ.சிவமயமும் திறந்து வைத்தனர். சிறப்புரைகளை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை. மாவட்ட அரச அதிபர் மு.பு.குழுத்தலைவர் இராசையா, க.து.ப.உதவி அரச அதிபர் காசிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

(20)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15
02
1947



மறைவு
16
07
2003

## சின்னப்பிள்ளை ஆறுமுகம்

(உதவிக்கல்விப் பணிப்பாளர் முல்லை. வலயம்)

திதி :- 04.07.2004

மாமா!

மாசற்ற உங்கள் அன்பினால்-எமை
உங்கள் பாசக் கைதிகளாக்கி
உறவுகளுக்கு உரமூட்டிய-எம் தெய்வமே
கடுகதியில் சென்ற உங்கள் வாழ்க்கைப் பயணம்
கண்ணிமைக்கும் நேரமதில் மறுமைக்குள்-சென்றதால்
கற்றவர்கள் கண்கலங்குவதும்-உங்கள்
செல்வங்கள் பாதிவழியில் பரிதவிப்பதும்-எங்கள்
அத்தை செய்வதறியாது பதைபதைப்பதும்-மீண்டும்
உங்களைக் காண்பதற்கு உறவுகள் ஏங்குவதும்-நீங்கள்
மண்விட்டு விண் தொட்டதாலோ?
உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்.

உங்கள் மருமகள்
க.தயாளினி.

4ஆம் வட்டாரம் (4626)

# கேள்வி அறிவித்தல்

வலயக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு அவர்களால் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைக்கு மூடிய கேள்விகள் இக்ராட்டுடன் பதிவு செய்த தரம் 8 அல்லது அதற்கு மேல் தகைமையுள்ள கட்டட நிர்மாண ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக 250/-ம், கேள்விப் பணமாக ரூபா 1000/-ம் வலயக் கல்விப் பணிமனையில் 20.07.2004ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு முன்னர் செலுத்தி கேள்விப்பத்திர ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் அனைத்தும் 23.07.2004 மு.ப. 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், கேள்விச் சபை, வலயக் கல்விப் பணிமனை, முல்லைத்தீவு என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரில் அனுப்பப்படல் வேண்டும். இவ்வேலைக்கு குறிப்பிட்ட பாடசாலைகளின் அபிவிருத்திச் சபை விரும்பினால் கேள்விகளைச் சமர்ப்பிக்க முடியும்.

வேலை விபரம் :

01. மு/ செம்மலை ம.வி. - பாடசாலை வகுப்பறையை கணினி, அறையாக மாற்றி அமைத்தல். 20'X20'

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தகாரர் இதற்குரிய பிணைப்பணத்தை வலயக் கல்விப் பணிமனையில் காசாக 28.07.2004ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் செலுத்தி உரிய ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளல் வேண்டும். மேலதிக விபரங்களை காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

த.குருகுலராசா,
தலைவர்/வலயக் கல்விப் பணிப்பாளர்,
கேள்விச் சபை,
வயலக் கல்விப் பணிமனை, முல்லைத்தீவு.

(சி-9137)

# பதவி வெற்றிடம்

வவுனியா வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ்க் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பிக்க விரும்பும் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் தலைவர், வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி என்ற முகவரிக்கு 15.07.2004 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அன்றேல் பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

01. கிளைமுகாமையாளர்:- 165/88 - 13 31/99இன்படி

சம்பளம்: 5250.00-75.00X10-80.00X10 / 63000.00-900.00X10-960.00X10 = 81600/=

வயதெல்லை:- 18-45 வரை

கல்வித்தகைமை:- க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில்

1. தமிழ்பாஷை, கணிதம்1/கணிதம்2/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. தமிழ், கணிதம்/வர்த்தகமும்கணக்கியலும் க.பொ.த. உயர்தரத்தில்சித்திபெற்றிருப்பின் க.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ், கணிதம்1/கணிதம்2/ வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இவற்றில் ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்கப்படும்.

02. வாகனக்காப்பாளர்:- 314 /16 31 /99இன்படி

சம்பளம்:- 4500.00-60.00X10-65.00X10 / 54000.00-720X10-780.00X10 = 69000/=

வயதெல்லை:- 18-45

கல்வித்தகைமை:- 5ஆம் ஆண்டுக் கல்வித்தகைமையுடன் நல்ல தேகாரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தலைவர்,
வ.வ.ப.நோ.கூ.சங்கம்,
நெடுங்கேணி.

(சி-9877)

# மீட்பு நடவடிக்கைக்கு தனியான சிறப்புப் படை அமைக்கப்படும்

### - இந்திய மத்திய அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

இயற்கை சீற்றம் உள்ளிட்ட போரிட்ட காலங்களில் மீட்பு நடவடிக்கைகளை மேற் கொள்வதற்குச் சிறப்பு படைகள் அமைக்கப்படும் என்று மத்தியரசு தெரிவித்துள்ளது.

இயற்கை சீற்றங்களிலிருந்து மீள்வது எப்படி எனும் மாநாடு புதுடில்லியில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இதில் கலந்து கொண்ட உள்த்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் இயற்கை சீற்றம் உள்ளிட்ட மோசமான காலகட்டங்களில் மீட்பு நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளும் வகையில் புதிய சட்டம் இயற்றப்படும் என்றும் இதற்காக சிறப்பு மீட்புப்படை ஒன்றை மத்தியரசு அமைக்கும் என்றும் அவா கூறியுள்ளார்.

# ஜம்முகாஷ்மீரில் குண்டு வெடிப்பு ஒருவர் பலி; சிறுவர்கள் உட்பட 12 பேர் காயம்

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நேற்றுக் காலை நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். பாடசாலை சிறுவர்கள் உட்பட 12 பேர் பலத்த காயமடைந்துள்ளனர்.

கடந்த சில மாதகாலமாக ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத தாக்கு தல்கள் அதிகரித்து வருகின்றது.

இந்த வகையில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய வெவ்வேறு தாக்குதல்களில் ஏழுபொலிசார் உட்பட 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று ஜம்முகாஷ்மீரின் பால்கீற் எனுமிடத்தில் சுற்றுலாப் பயணிகளின் மையமருகே பழங்கள் விற்பனை செய்யும் தள்ளு வண்டியில் மறைத்து வைத்திருந்த கண்ணி வெடியைத் தீவிரவாதிகள் மறைந்திருந்து இயக்கி வெடிக்கச் செய்துள்ளனர்.

அமர்நாத் யாத்திரை எதிர்வரும் 14 ஆம் திகதி தொடங்கவுள்ள நிலையில் அதனை நடக்கவிடாது தடுக்கும் வகையில் தீவிரவாதிகள் நடத்தி வருவதாக மாநில பொலிசார் கூறியுள்ளனர்.

# நான்கு மாநிலங்களின் ஆளுநர்களை இந்திய மத்திய அரசு பதவி நீக்கியது

(புதுடில்லி)

**கோவா, குஜராத், ஹரியானா உத்தரப்பிரதேசம் எனும் நான்கு மாநிலங்களின் ஆளுநர்களையும் மத்தியரசு நேற்று முன்தினம் பதவியிலிருந்து நீக்கியுள்ளது.**

கோவா ஆளுநர் கேதார சாகின், குஜராத் ஆளுநர் கைலாசபதி மித்ரா, ஹரியானா ஆளுநர் பாபு பரமானந்த், உத்தரப்பிரதேச ஆளுநர் விஸ்னுகாந்த் சாஸ்திரி ஆகியோரை பதவியிலிருந்து நீக்கும் உத்தரவை இந்திய சனாதிபதி அப்துல்கலாம் நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளார்.

மகாராஸ்டிராம், மத்தியபிரதேசம், பஞ்சாப், உத்தராஞ்சல் ஆளுநர்களுக்கு பதவி நீக்கப்பட்ட நான்கு மாநில ஆளுநர் பொறுப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய சனநாய கூட்டணி ஆட்சியில் அரசியல் காரணத்தோடு நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் பதவி விலக வேண்டுமென்று புதிய மத்தியரசு மறைமுகமாக கூறியது.

ஆனால் அவர்கள் பதவி விலகத் தேவையில்லை என்று பாரதிய ஜனதாக்கட்சி கூறியதையடுத்து இந்த நடவடிக்கையை புதிய மத்தியரசு எடுத்துள்ளது.

# மத்திய அரசிலிருந்து குற்றப் பின்னணியுடைய அமைச்சர்களை நீக்குவது தொடர்பில் இணக்கப்பாடு

### - மக்களவைத் தலைவர் சட்டர்ஜி ஆராய்வு

மத்தியரசிலிருந்து குற்றப் பின்னணியுள்ள அமைச்சர்களை நீக்குவது தொடர்பான பிரச்சினையில் அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையே இணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் மக்களவைத் தலைவர் சோம்நாத் சட்டர்ஜி, நேற்று முன்தினம் தேசிய சனநாயக கூட்டணியுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

ஆனால் இந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பாரதிய ஜனதாவின் பாராளுமன்ற செய்தித் தொடர்பாளர் மல்கோதரா,

குற்றப் பின்னணியுள்ள அமைசசர்கள் நீக்கப்படும்வரை போராட்டம் தொடரும் என்று கூறியுள்ளார்.

அமைச்சர் லல்லு பிரசாத்யாதேவ், ஆறாம் திகதி புகையிரத பட்ஜெட்டை தாக்கல் செய்யும் போது அந்த நிகழ்ச்சியைப் புறக்கணிப்பதா... இல்லையா... என்று ஐந்தாம் திகதி முடிவு செய்யப்படும் என்று பாரதியஜனதா அறிவித்துள்ளது.

## நான்கு மாநில ஆளுநர்களின் பதவிநீக்கம் சனநாயகத்துக்கு விரோதமானது

### - வெங்கையாநாயுடு

உத்தரப்பிரதேசம், குஜராத் உள்ளிட்ட நான்கு மாநிலஆளுநர்களை சனநாயகத்திற்கு விரோதமான முறையில் மத்தியரசு பதவிநீக்கம் செய்துள்ளதாக பாரதிய ஜனதா தலைவர் வெங்கையாநாயுடு குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் அரசின் இந்த நடவடிக்கை தவறான ஒரு முன் உதாரணத்தை ஏற்படுத்தி விட்டதாகக் கூறியுள்ளார். மாநில ஆளுநர்களை அடுத்து மாநில அரசுகளைக் கலைக்கவும் காங்கிரஸ் அரசு திட்டமிட்டுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# ஈராக்கில் அனாதரவாகத் தவிக்கும் 18 இந்தியர்களை மீட்க வேண்டுகோள்

### கருணாநிதி விடுத்தார்

வேலை தேடிச்சென்று ஈராக்கில் அனாதரவாகத்தவிக்கும் 18 இந்தியர்களை மீட்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்கிற்கு தி.மு.க தலைவர் கருணாநிதி கடிதமெழுதியுள்ளார்.

18 இந்தியர்களில் மூன்றுபேர் தமிழ்நாட்டைச்சேர்ந்தவர்கள் என்றும், ஜோர்தானில் வேலை கொடுப்பதாக அமைத்துச் சென்று ஈராக்கின் பலூஜா நகரில் தவிக்க விடப்பட்டுள்ளதாகவும் கருணாநிதி அந்தக் கடிதத்தில் எழுதியுள்ளார்.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆளும் அரசு தொழில் வழங்க முடியாவிட்டால் ஐ.தே.க. போராடும்

### ஐ.தே.க.பேச்சாளர் கஜந்த கருணாதிலக

(கொழும்பு)

அதிகாரத்திற்கு வந்தபோது வாக்குறுதி அளித்தபடி வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு முடியாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சி கிளர்ச்சி நடவடிக்கையை ஆரம்பிக்கும் என ஐ.தே.கட்சி பேச்சாளரான கஜந்த கருணாதிலக கூறியுள்ளார்.

சென்ற புதன் ஊடாக மாநாடு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து ஒன்றரை மில்லியன் வேலையற்ற பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்கத் திட்டமிட்டிருந்தது.

ஆனால் சனாதிபதி சந்திரிகா அத்திட்டத்தை தடுக்கும் வகையில் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டார்.

தேர்தல் மேடையில் ஐ.ம.சு. முன்னணி அளித்த வாக்குறுதிகள் அதனால் நிறைவேற்றப்படாதவை என நாங்கள் முழுமையாக நம்புகிறோம். பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்குவதற்கான திட்டங்களோ சம்பளங்கள் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடோ அவர்களிடம் இல்லை. வேலையற்றபட்டதாரிகளை முன்னணி அரசாங்கம் ஏமாற்றி விட்டது என்றும் கருணாதிலக தெரிவித்துள்ளார்.

# மாத்தளை ஆதார வைத்தியசாலையின் நோயாளர்களின் அனுமதி இடைநிறுத்தம்

மாத்தளை ஆதார வைத்தியசாலையின் பிரதான பிரிவான மூன்றாம் பிரிவில் நோயாளர்களின் அனுமதி இடை நிறுத்தப்பட்டுள்ளது.

தேவையான மருத்துவ உபகரணங்கள் இல்லாமை காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலையின் மருத்துவர் ஒருவர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் முதல் மூன்றாம் பிரிவில் நோயாளர்களின் அனுமதி இடை நிறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

# விவசாய அமைச்சின்கீழ் செயற்படும் நிறுவனங்களில் இடம் பெறும் மோசடி குறித்து விசாரணை

விவசாய அமைச்சின் கீழ் செயற்படும் சகல நிறுவனங்களிலும் இடம்பெறுவதாகக் கூறப்படும் மோசடிகள், ஒழுங்கீனங்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக பிரதி அமைச்சர் விமல் ரட்ணநாயக்க தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சின் செயலாளர் தலைமையில் இது தொடர்பான விசாரணைக்குழுக்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளனவென்றும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கை உரக்கம்பனி, வர்த்தக உரக்கம்பனி, நீர்வள சபை விவசாயக் காப்புறுதிசபை ஆகியவற்றில் பெரும் அளவிலான மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக்குற்றங்களுக்குப் பொறுப்பாக இருப்பவர்களை கண்டு பிடித்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.


## நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்

# பணிநிலை வேண்டுகை

எமது நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் தங்கு விடுதியையும், அதில் தங்குவோரையும் பராமரிக்கக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் நேரில் அல்லது 10.07.2004ஆம் திகதிக்கு முன்னராக எமக்குக் கிடைக்கத்தக்கதாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

| | | |
|---|---|---|
| பதவி | : | விடுதி பராமரிப்பாளர் |
| தகைமைகள் | : | ஆண்டு 09 சித்தி |
| அகவை | : | 25 தொடக்கம் 40 வரை |

குறிப்பு:-
- தேக ஆரோக்கியம் இருத்தல் வேண்டும்.
- தொடர்ச்சியாக தங்கி இருந்து வேலை ஆற்றக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.
- உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**நிறைவேற்றுப் பணிப்பாளர்,**
நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்,
தலைமைப் பணிமனை,
கிளிநொச்சி.

(சி-9896)


# தேர்தல் விதிகளை மீறினார்கள் 50 வேட்பாளர்கள் பொலிசாரால் கைது

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள 50 வேட்பாளர்கள் தேர்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

தேர்தல் விதிகளை மீறியமை தொடர்பாக இதுவரை 237 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல் களங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார். இதே வேளை 7 ஆம் திகதி நள்ளிரவுடன் சகல தேர்தல் பிரச்சார நடவடிக்கையினையும் நிறுத்திக்கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சிப்பாய் கைது

கொலைச் சம்பவம் தொடர்பாக தப்பியோடிய இராணுவச் சிப்பாய் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 2001-யூலையில் ரஞ்சித் மெண்டிஸ் என்பவரை, அவரது மனைவியிடம் இரண்டு இலட்சம் ரூபா பணம் பெற்று ஒப்பந்த முறையில் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டே இச்சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

# உலகமே ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் யூரோக்கிண்ண கால்பந்து இறுதிப்போட்டி இன்று




கால்பந்தாட்ட உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துள்ள யூரோ 2004 கால்பந்து சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் இன்று போர்த்துக்கல் அணியை கிரேக்க அணி எதிர்த்தாடவுள்ளது.

போர்த்துக்கலின் லிஸ்பன் நகரில் நடைபெறவுள்ள மேற்படி இறுதிப் போட்டியில் ஆயிரக் கணக்கான ரசிகர்கள் அரங்கில் நேரடியாகவும், கோடிக்கணக்கான ரசிகர்கள் தொலைக்காட்சி மூலமும் கண்டுகளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜாம்பவான் அணிகளை வீழ்த்தி இறுதிப் போட்டியில் நுழைந்துள்ள இரு அணிகளும் ஆரம்ப லீக்போட்டியில் ஒன்றை ஒன்று சந்தித்தவை என்பதால் இறுதிப்




போட்டி மேலும் பரபரப்பை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்பப் போட்டியில் கலந்து கொண்ட அணி இறுதிப்




போட்டிக்குத் தகுதிபெறுவது இது இரண்டாவது தடவையாகும்.

முதல்லீக் போட்டியில் போர்த்துக்கல் அணியை கிரேக்க அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானைத் தோற்கடித்து ஆசியக்கோப்பையைக் கைப்பற்றுவோம்

## -ராகுல் ராவிட்




ஆசியக்கோப்பையை இந்தியா கைப்பற்று வது உறுதி என்று இந்தியக் கிரிக்கெட் அணியின் துணைத்தலைவர் ராகுல்ராவிட் கூறி உள்ளார். இந்தியலீக் கிரிக்கெட் அணியின் துணைத்தலை வர் ராகுல்ராவிட் நேற்று முன்தினம் பெங்களூரில் இருந்து விமானம் மூலம் சென்னை வந்தார். அப்போது அவர் சென்னை விமான நிலையத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது;

ஆசிய நாடுகளுக்கிடையேயான ஆசியக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி இம்மாதம் 15 ஆம் திகதி இலங்கையில் தொடங்குகிறது. அதற்கான பயிற்சி ஆட்டம் சென்னையில் இன்று தொடங்குகின்றது. இந்தப் பயிற்சி ஆட்டத்தில் கலந்து கொள்ள சென்னை வந்துள்ளேன். ஏற்கனவே பெங்களூரில் நடந்த பயிற்சி ஆட் டம் நமது வீரர்களுக்கு சிறப்பான பயிற்சியாக அமைந்துள்ளது. ஆசியக் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியில் புதிய யுக்திகள் பயன்படுத்தப்படுமா என்று இப்போது கூறமுடியாது.அணியின் பயிற்சியாளர் ஜான்ரைட் எவ்வாறு கூறுகிறாரோ அதைப் போல் செயற்படுவோம். ஆனாலும் ஆசியக்கோப்பையில் பாகிஸ்தானை தோல்வியடையச்செய்து ஆசியக்கோப்பையை கைப்பற்றுவது உறுதி என்றார்.

# டார்வின் ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு ஏற்றதல்ல

## மாவன் அத்தப்பத்து



அவுஸ்திரேலியாவுடன் முதலாவது டெஸ்ட் போட்டியில் தமது வீரர்கள் சரியாக துடுப்பெடுத்தாடவில்லை என சிறிலங்கா கிரிக்கெட் அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து தெரிவித்துள் ளார்.


ஆடுகளமே இதற்கு காரணம் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை ஆடுகளத்தை இரண்டு அணி வீரர்களும் குறை கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கெய்ன்ஸ் ஆடுகளமானது ரசிகர்களுக்கு விருந்து படைக்கும் அதே போன்று இரண்டு அணிவீரர்களுக்கும் சாதகமான ஆடுகளமாக விளங்கும் என நம்பப்படுகிறது.

# -அவுஸ்-சிறிலங்கா முதலாவது டெஸ்ட் போட்டி-

# கஸ்பரோவிக் அபார பந்து வீச்சு; அவுஸ்திரேலியாவுக்கு 149 ஓட்ட வெற்றி



சிறிலங்கா அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் டார்வினில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 149 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டி மூன்று நாட்களில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி தமது முதலாவது இனிங்சில் 207 ஓட்டங்களைப் பெற்றது.

சிறிலங்கா அணி தமது முதல் இனிங்சில் 97 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலிய அணி தமது இரண்டாவது இனிங்சில் 201 ஓட்டத்தைப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து சிறிலங்கா அணி மூன்றாம் நாளான நேற்று வெற்றி இலக்கான 312 ஓட்டத்தைப் பெற களமிறங்கியது.

ஆரம்பம் முதலே அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது விக்கெட்டுக்களை பறிகொடுத்து 162 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ஜெயவர்த்தன அதிகபட்சமாக 44 ஓட்டங்களைப் பெற்றார். பயிற்சிப் போட்டியின் போது 203ஓட்டங்களைக் குவித்த சங்கக்கார ஓட்டம் எதுவும் பெறாது ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் மைக்கல் கஸ்பரோவிக் 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

என்றாலும் முதல் இனிங்சில் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி மீண்டும் அவுஸ்திரேலிய அணியில் தனது இடத்தை நிலை நிறுத்தி இருக்கும் மெக்ராத் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இரண்டாவதும் இறுதியுமான போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி கெய்ன்சில் நடைபெறவுள்ளது

இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற நிலையில் அவுஸ்.முன்னிலை பெற்றுள்ளது.




## விம்பிள்டன் பகிரங்கடென்னிஸ்

# பெண்கள் ஒற்றையர் பட்டத்தை ரஷ்யாவின் சரகோவா கைப்பற்றினார்

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் போட்டியின் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இரண்டு முறை விம்பிள்டன் பட்டம் வென்ற செரீனா வில்லியம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் ரஷ்யாவின் மரியோவா சரகோவா 6-1,6-2 என்ற நேர் செட்களில் செரினாவை தோற்கடித்து பட்டத்தை வென்றார்.17 வயதான சரகோவா பெற்ற முதலாவது சர்வதேச சம்பியன் பட்டம் இதுவாகும். மேற்படி போட்டி ஒரு மணி நேரத்துக்குள் நிறைவுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ்

# அன்டிறொடிக், ரோஜர் பெடரர் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றனர்



பெடரர்

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் போட்டிகளில் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் விளையாட சுவிற்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் தகுதி பெற்றுள்ளார். ஆண்கள் டென்னிஸ் தரப்படுத்தலில் முதலிடம் வகிக்கும் ரோஜர் பெடரருக்கும் பிரான்ஸ் வீரர் செபஸ்ரியான்டொஸ்ரனுக்கும் இடையிலான முதலாவது அரையிறுதிப் போட்டி மழை காரணமாகத் தடைப்பட்டது.

பின்னர் நேற்றுத் தொடர்ந்த ஆட்டத்தில் ரோஜர் பெடரர் வெற்றிபெற்றார். அமெரிக்க வீரர் அன்டிரொடிக்கிற்கும் குரோசிய வீரர் மரியோ அன்சிசிற்கும் இடையிலான மற்றைய அரையிறுதிப் போட்டியில் அன்ரிரொடிக் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றார்.



ரொடிக்

# முல்லை. இல் நடைபெறும் கரும்புலிகள் நாள் விளையாட்டுப் போட்டிகளின் சில இறுதி முடிவுகள்

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தினதும் அதன் இணை நிறுவனங்களினதும் தமிழீழ விளையாட்டுத் துறையினரதும் அனுசரணையுடன் நடைபெற்று வரும் விளையாட்டுபோட்டியின் முதலாம் நாள் விளையாட் டுக்கள் இரவு 12.30 மணிவரை முல்லைத் தீவு பொது மைதானத்தில் நடைபெற்றது. இதில் தலையணைச்சண்டை பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை சி.பிறைநிலா, இரண்டாம் இடத்தை சி. மதிநிலா ஆகியோரும் தலையணைச்சண்டை ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை அ.விஜயஅமிர்தராஜ், இரண்டாம் இடத்தை அ.சுபாஸ்கரன் ஆகியோரும் பெற்றனர். கபடிப்போட்டி பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை 738 புள்ளிகளைப்பெற்று புதுக்குடியிருப்பு சுப்பராங் அணியும், இரண்டாம் இடத்தை கள்ளப்பாடு அலையோசை விளையாட்டுக் கழகமும் பெற்றன.

கபடி ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை 32 புள்ளிகளைப்பெற்று முல்லைத்தீவு ஒற்றுமை அணியும், இரண்டாம் இடத்தை வட்டக்கச்சி ஜொனி விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.

இறுதிநாள் நிகழ்வாக கடலில் நீச்சல் போட்டி, படகோட்டம் என்பன காலை 6.00மணிக்கு ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ விளையாட்டுத் துறை நடாத்தும்

# இளையோர் தேசிய தடகளப் போட்டிகள் மிகவும் கோலாகலமாக ஆரம்பம்

தமிழீழ விளையாட்டுத் துறையினரின் 1ஆவது இளையோர் தேசிய தடகளப் போட்டி நேற்று யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மிகவும் கோலாகலமான முறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் உள்ள 08 மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் 2000 வீரவீராங்கனைகள் பங்கு கொண்ட இவ் விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வாக தாயகப் பிரதேச வீர வீராங்கனைகள் பாண்ட் வாத்திய அணி வகுப்பு மரியாதையுடன் மைதானம் நோக்கி அழைத்து வரப பட்டு, அங்கு விளையாட்டு விழா ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன.


இதில் பொதுச்சுடரினை மாவீரர் மேஜர் இன்பனின் தாய் தந்தையரும், தமிழீழ தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றிவைக்கப்பட்டது. அக்கராயன் மகாவித் தியாலயத்தின் மாணவி தாரணியும், யாழ். பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவன் ந.சஞ் சீவனும் ஒலிம்பிக் தீபத்தை ஏந்தியவாறு மைதானத்தை வலம் வந்தனர். ஒலிம்பிக் தீபம் ஏற்றும் நிகழ்வை தமிழீழ விளை யாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஆரம்பித்து வைத்தார்.

பின் விளையாட்டு வீரர்கள், நடுவர்கள் ஆகியோரின் சத்தியப் பிரமாணங்கள் எடுக்கும் நிகழ்வு இடம் பெற்றதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியினால் விளையாட்டு விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் துறை உதவிப்பணிப்பாளர் ந.விமலராஜன்,தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்,யாழ். மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி உட்பட போராளிகள், மாணவர்கள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

### சிந்தனைக்கு



சமூகநீதி சரிவரப் பேணப் பட்டால்தான் சமுதாயம் ஒரு உன்னத நிலைக்கு வரும்

தமிழீழத்தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 04-07-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com

## பேரினவாதத்திற்கு இளரத்தம்!

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் – விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதுவித முன்னேற்றமும் காணாமல் இழுபறி நிலையில் உள்ளமை வெளிப்படையானதொன்று. இதற்கு அரசாங்கத் தரப்பு பேச்சுவார்த்தை தொடர்பாக கடைப்பிடிக்கும் முன்னுக்குப் பின் மாறான நிலைப்பாடும், உறுதிப்பாடற்ற தனமுமே காரணமாகும் என்பதும் அறியப்பட்டதொன்றே.

இடை நிறுத்தப்பட்ட அரசிற்கும் – புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க நோர்வே அரசு மேற்கொண்ட உயர் மட்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை. நோர்வேயின் வெளிவிவகாரத்துறையினருக்கு இதனால் பலத்த ஏமாற்றமே ஏற்பட்டது. ஆயினும், நோர்வேத் தரப்பு தமது முயற்சியில் முனைப்புக் காட்டியவண்ணமே உள்ளது.

ஆனால், தற்பொழுது எழும் கேள்வியாக தன்னாட்சி அதிகார சபை குறித்துப் பேச சனாதிபதி சந்திரிகா தயாரானாலும் அதனால். பயன் ஏதும் உண்டா? என்பதே உள்ளது. ஏனெனில், இடைக்கால நிர்வாகம் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு ஜே.வி.பி. தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்தவண்ணமே உள்ளது.

இந்தவகையில், "இனப்பிரச்சினைத் தீர்விற்கான இறுதி வழிவகைகள் பற்றி ஆராயாமல், விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து மட்டும் பேசுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிற்கு உரிமை கிடையாது" என்று ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் டில்வின்சில்வா கூறியிருப்பதும்,

"ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் ஜே.வி.பி. பங்காளிக் கட்சியல்ல. அதனை உருவாக்கி ஆட்சிக்குக் கொண்டுவந்தவர்கள் நாங்கள்தான். எனவே, அரசாங்கத்தின் உரிமையாளர்களும் நாங்களே" என்ற ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர்களும், கிராமிய அபிவிருத்தி சிறு கைத்தொழில் அமைச்சர் ஜே.ரி. லால் காந்தவின் கூற்றுக்களும்,

சனாதிபதி சந்திரிகாவுடனோ அன்றி அவரது தலைமையிலான அரசாங்கம் எனக் கூறிக் கொள்ளும் ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்துடனோ பேச்சுவார்த்தைகள் நடத்துவதினால் பயன் ஏதும் உண்டா? என்ற கேள்விக்குக் காரணமாகியுள்ளது. ஏனெனில், இதில் ஒருவரின் பேச்சு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேச அரசாங்கத்திற்கு உரிமை இல்லை எனத் தெரிவிக்கையில், மற்றொருவரின் பேச்சு அரசாங்கமே எங்களது அனுமதியில்லாது அரசாங்கத்தின் பெயரில் எவருக்கும் பேச்சு நடத்த உரிமை இல்லை என்பதாகவுள்ளது.

இதேவேளை, ஜே.வி.பி.யினரின் இத்தகைய எச்சரிக்கைகளைப் புறந்தள்ளி விடவும் முடியாது என்றே கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில், ஜே.வி.பி. கூறுவது போன்று ஐ.ம.சு. முன்னணியை உருவாக்கிய 'சாதனை' அதற்கு உரியதோ இல்லையோ ஆனால், அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கும் சக்தி அதனிடம் உண்டு என்பது நிராகரிக்கப்படுவதற்கில்லை. அதாவது ஜே.வி.பி.தனது நிலைப்பாட்டை மாற்றினால் ஆட்சி கவிழ்வதை நிறைவேற்றுஅதிகாரத்தாலும் தடுத்துநிறுத்திவிட முடியாது.

இதனைத் தவிர ஜே.வி.பி.யானது தனது இடதுசாரிக் கொள்கை கோட்பாடுகள் யாவற்றையும் துறந்து இன்று பௌத்த – சிங்கள தீவிர அடிப்படைவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுடன் இனவாதம் பேசுவதில் போட்டியிடும் கட்சியாக மாறியுள்ளது.

இந்த நிலையில், ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்தின் சார்பில் ஜே.வி.பி.யின் அனுமதியோ / அங்கீகாரமோ இன்றி சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதும், இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து பேசுவதும் எந்தளவிற்கு இனப்பிரச்சினைத் தீர்விற்கு முன்னேற்றம் காண்பதற்கு அனுசரணையாக இருக்கும்? இதுகாலத்தையும், பொருளையும் வீண்விரயம் செய்வதாக இருக்கமாட்டாதா?

ஜே.வி.பி.யைப் பொறுத்து அது இனவாதத்தையே இன்று தனது மூலதனமாக்கியுள்ளது. முன்னைய சிங்கள ஆட்சியாளர்கள் யாவரும் இதனையே செய்தனர். ஆயினும், ஜே.வி.பி. இனவாதத்திற்கு மேலும் இள இரத்தமும், புது இரத்தமும் பாய்ச்ச முற்படுகின்றது. இந்நிலையில் அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தஅறிவிப்புக்கள் சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தும் நோக்கில் ஒப்புக்கான அறிவிப்புக்களாக இருக்குமே ஒழிய இனப்பிரச்சினைக்குத் தீர்வெதையும் கொண்டு வருவதற்கு உதவப் போவதில்லை.

அதாவது தீவிர பௌத்த அடிப்படைவாதத்திற்கு ஜாதிகஹெல உறுமய வழங்க முன்வந்துள்ள தலைமைத்துவத்தைக் கண்டு சிற்றமடைந்துள்ள ஜே.வி.பி. அதனைப் பறித்தெடுக்கும் வகையில் அதனுடன் போட்டியில் இறங்கியுள்ளது. இன்றுள்ள நிலையில் ஐ.தே.கட்சியினைவிட ஜாதிக ஹெல உறுமயவே ஜே.வி.பி.யின் பிரதான எதிரியாகியுள்ளது. ஆகையினால் இனவாதத்தின் உச்சிக்கே அது செல்லும் என்பது எதிர்பார்க்கத்தக்கதே.

# இடைக்கால தன்னாட்சி குறித்துப் பேசினால் ஜே.வி.பி. அதில் குறுக்கீடு செய்யும்

**–பிரச்சாரச் செயலாளர் டில்வின்சில்வா**

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக் கப்பட்டால் அதில் தாம் குறுக்கிடு வோமென ஜே.வி.பி அறிவித் துள்ளது.

இறுதித்தீர்வு குறித்துப் பேசுவதற்கு முன்னர் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேசுவதற்கு அரசாங்கத்துக்கு எதுவித உரிமையும் இல்லையென கொழும்பு ஆங்கில நாளேடொன்றுக்கு ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் டில்வின் சில்வா கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளின் பேரில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்துப் பேசியபின்னரே, இறுதித் தீர்வு குறித்துப்பேசுவதற்கு சிறிலங்கா சனாதிபதி முடிவெடுத்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகளுக்குபதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பத்திரிகைகளில் வெளியாகும் இத்தகைய செய்திகள் சனாதிபதியினதோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினதோ உத்தியோகபூர்வமான கருத்துக்கள் அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இன்னமும் உத்தியோகபூர்வமான முடிவுகள் எதனையும் எடுக்கவில்லையெனவும் ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் டில்வின் சில்வாதெரிவித்துள்ளார்.

# எரிக்சூல் ஹெய்மைச் சந்திக்க ஹக்கீமுக்கு நேரமில்லையாம்

சிறிலங்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சூல் ஹெய்மைச் சந்திப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மறுப்புத் தெரிவித்துள்ளதாக இணையத் தளமொன்று தெரிவிக்கிறது.

சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலானஇடை நிறுத்தப் பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கில் தற்போது சிறிலங்கா சென்றுள்ள எரிக் சூல்ஹெய்மை சந்திப்பதற்கு கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் ரவூப்ஹக்கீமை அணுகியிருந்தது.

இருந்தபோதிலும் இம்மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களில் வேலைப்பளு காரணமாகவே ரவூப் ஹக்கீமினால் சூல்ஹெய்மை சந்திக்க முடியாமல் உள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

# போலி இலக்கத் தகட்டுடன் பிக்கு சென்ற வாகனம் சிக்கியது

(கொழும்பு)

போலி இலக்கத் தகடு கொண்ட வாகனத்தில் வந்த ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான பிக்கு பொலிசாரிடம் மாட்டிக் கொண்டுள்ளார்.

ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத்தலைவரான அதுரலிய ரத்ன தேரர் வாகன மொன்றில் மாத்தறைக்கு சென்று கொண்டிருந்தார்.

இவ் வாகனத்தை பொலிசார் சோதனையிட்டுக் கொண்டிருந்தபோது இவ் வாகனத்தின் இலக்கத்தைக் கொண்ட இன்னுமொரு வாகனம் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தது.

இதனால் அதிர்ச்சியுற்ற பொலிசார் மேலும் விசாரணை செய்ததில் பிக்குபயணித்த வாகனத்தின் இலக்கத் தகடு போலியானது எனத் தெரியவந்தது.

இது குறித்து, குறித்த பிக்கு விடம் பொலிசார் விசாரித்தபோது இவ்வாகனம் தனது நண்பர்ஒரு வருடையது என்றும் அதன் இலக்கம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், கூறியுள்ளார்.

இவ் வாகனத்தின் உரிமையாளர் தாம் வரவழைத் துள்ளதாகவும் நிதி நிறுவனத் திற்குரிய கடனைத் திருப்பிச் செலுத்தாததனால் அவர் இலக்கத் தகட்டினை மாற்றியிருக்கலாம் எனத்தாம் நம்பு வதாகவும் மாத் தறைப் பொலிசார் கூறியுள்ளனர்.

### பிளாஸ்ரிக்கிற்கு தடை விதிக்கப்படும்

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பைகளின் பொதுஇடங்களில் உபயோகிப்பதற்கு தற்காலிகமாகத் தடைவிதிப்பதற்கான சட்டம் ஒன்று சிறிலங்காவின் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டவுள்ளது.

இதற்கான சட்டமூலம் ஒன்றை சுற்றாடல் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி பாராளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

சுற்றாடலை மாசுபடுத்தும் இத்தகைய பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பைகளின் தற்காலிகத் தடைக்கு அமைச்சரவை தனது அனுமதியை வழங்கியுள்ளதாக அரசதரப்புச்செய்திகள் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

# ஜே.வி.பி யின் வரலாறு காலம் காலமாக சனநாயகத்தை எதிர்ப்பதாகவே இருந்து வருகிறது

**–எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க**

ஜே.வி.பி.யின் வரலாறு தொடர்ச்சியாக. சனநாயகத்தை எதிர்ப்பதாகவே இருந்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

1980 களில் ஜே.வி.பி.யினால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறுபட்ட குடியாட்சிக்கு எதிர்ப்பான நடவடிக்கைகள் அப்போதைய எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டார நாயக்க ஐக்கியதேசியக் கட்சி அரசுடன் இணைந்து தோற்கடித்து சனநாயகத்தையும் சனநாயக ஸ்தாபனத்தையும் காப்பாற்றி னாரென எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். காலியில் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் களுடன் நடைபெற்ற ஒன்று கூடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிறிமாவோ பண்டார நாயக்கவின் மகளான சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி. யுடனும் அவர் களுடைய பேராசை பிடித்த அங்கத்தவர்களுடனும் கடுமையாக முயற்சி செய்து கூட்டுச்சேர்ந்து அரசு ஸ்தம்பிதநிலையிலுள் ளதாகக் குறிப்பிட்டார்.. 1988 சனாதிபதித் தேர்தலில் இருந்து ஜே.வி.பி. தேர்தல்களைக் குழப்புகின்ற பழக்கத்தைக் கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். தேர்தல் காலத்தின் போது வேட்பாளர்கள் எவ்வாறு ஜே.வி.பி.யினரால் அச்சுறுத்தப் பட்டார்கள் என்பதையும்அவர் நினைவூட்டினார். அரசியலுடன் தொடா புடை.யமக்கள் மட்டுமல்லாமல் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜே.வி.பி.யி னரின் கொலை மிரட்ட லிற்கு உள்ளாகினர் எனவும் அவர் குறிப்பிட்டார். பழிவாங்கும் வஞ்சகச்செயற்பாடுகளினால் பாராளுமன்றம் அதன் பலத்தின் காரணமாகத்தோல்வியடைந் துள்ளது.2001 இல் தமது அரசு ஆட்சியேற்ற இரண்டு வருடகாலப் பகுதியில் நாட்டை மறு மலர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்ற தாகவும் குறிப்பிட்டார். அவர் நாட்டின்நல்ல எதிர்காலத்திற்கு அடித்தளமிட்ட, அர்ப்பணிப்புச் செய்த மக்களிற்கு தனதுநன்றி யினையும் தெரிவித்தார். ஆனால் ஜனாதிபதி பாராளுமன்றக் காலத்திற்கு முன் அதைக் கலைத்து தேவையற்ற தேர்தலை பிழையான வாக்குறுதிகளை வழங்கி எல்லா வற்றையும் அழித்துள்ளார் எனவும் குறிப்பிட்ட அவர்ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் பாராளு மன்றப் பெரும்பான்மையைப் பெற முடி யாது எனவும் அவர்கள் பாராளு மன்றை அழிப்பதுடன் நாட்டையும் அழிக்கவும் முயற்சி செய்வதாகவும் குறிப்பிட்டார்.

# அதிகாரி ஒருவரின் கவனயீனமே அரச அச்சகத் தீயிற்கு காரணம்

**-அச்சக அதிபர் தெரிவிப்பு-**

அதிகாரி ஒருவரின் கவனயீனமே அரசாங்க அச்சகத்தில் ஏற்பட்ட தீ விபத்திற்கு காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அரச அச்சகத்தில் அண்மையில் தீ விபத்து ஏற்பட்டமை தெரிந்ததே. தீ விபத்துத் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளதாக அச்சக அதிபர் தெரிவித்துள்ள போதிலும் நாளையே விசாரணை அறிக்கை கிடைக்கும் என அவா மேலும் தெரிவிததுள்ளார். அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களமும் குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளன. விசாரணையின் விபரங்கள் கிடைத்துள்ள போதிலும் உத்தியோகபூர்வ அறிக்கை இதுவரை கிடைக்கவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார். அறிக்கை கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித் துள்ளார்.

முல்லையில் நடைபெற்ற பெருவிளையாட்டு விழாவில்...



(படங்கள் அ.லோகீசன்)

### கரும்புலிகள் நாளை முன்னிட்டு

# முல்லையில் சிறப்புற நடைபெற்ற

# 2 ஆம்நாள் பெருவிளையாட்டுப்போட்டி

(அலுவலகசெய்தியாளர்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு முல்லை.கடற்றொழிலாளர் சமாசமும் அதன் இணைநிறுவனங்களும் இணைந்து நடத்தும் பெருவிளையாட்டுப் போட்டிகளின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் முல்லை. பொது விளையாட்டு மைதானத்திலும் சுற்றுலாமையத்திலும் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

நேற்று மாலை 4.30 மணிக்கு முல்லை. பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச் சுடரினை கராத்தே ஆசிரியர் நவரத்தின ஜோதி முல்லைநகர் புனரமைப்பு குழுத்தலைவர் இராசையா ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக்கொடியை வடபோர்முனைக கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றிவைத்தார்.

மைதானத்தில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்த கரும்புலிகளின் பொது நினைவுப் படத்திற்கு கடற்கரும்புலி மேஜர் நல்லமுத்து அவர்களின் தாயார் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து முன்பள்ளிச் சிறார்களின் உடற் பயிற்சிக் கண்காட்சி நிகழ்வு மைதானத்தில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து யாழ். நாவாந்துறை சென்நீக்கிளஸ் அணிக்கும், மன்னார் மாந்தை தெரிவு அணிக்கும் இடையில் சினேகித பூர்வ உதைபந்தாட்டப் போட்டி ஆரம்பமானது. இப் போட்டியில் யாழ்.நாவாந்துறை சென்நீக்கிளஸ் அணி இரண்டு கோல்களைப் போட்டது. மன்னார் மாந்தை அணி ஒரு கோல் போட்ட நிலையில் சென் நீக்கிளஸ் அணி ஒருகோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

முன்னதாக உதைபந்தாட்டப் போட்டியை குட்டிசிறி மோட்டார் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் பானு, வடபோர் முனைக் கட்டளைத்தளபதி, கேணல் தீபன் , கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோர் கைலாகு கொடுத்து போட்டிகளை ஆரம்பித்து வைத்தனர்.

அடுத்ததாக ஆண் பெண் இரு பாலாருக்குமான கயிறிழுத்தல் போட்டி நடைபெற்றது. அத்துடன் முல்லை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டிகள் யாவும் நிறைவடைந்தது. முல்லை கடற்கரையில் அமைந்துள்ள சுற்றுலாவிடுதியில் மல்யுத்தம், குத்துச்சண்டை (தெரிவு நிகழ்ச்சி) போட்டிகள் ஆரம்பமாகி மின்னொளியில் நடைபெற்றன.

நேற்று இடம்பெற்ற போட்டிகளில் தமிழீழத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவான போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் சிறப்பு விருந்தினர்களாக குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத் தளபதி கேணல் பானு வடபோர் முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் நாள் போட்டிகள் இன்று மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும். இதில் யோகாசனக் கண்காட்சி, மல்யுத்தம், குத்துச் சண்டை, போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இடம்பெறும் அதேவேளை, வெற்றி பெற்ற வீரர்களுக் கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து இசை நிகழ்வுகளும் இடம்பெறும் எனவும் விளையாட்டுப்போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (லோ,ச,20)

## மாமனிதர் பேராசிரியர் துரைராஜா நினைவுப்பேருரை

காலஞ்சென்ற யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் 'மாமனிதர்' பேராசிரியர் துரைராஜா அவர்களின் நினைவுப் பேருரை நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மொறட்டுவ பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் தயாந்த எஸ்.விஜயசேகர, யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சிவசூரிய, யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி மற்றும் பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள் , மாணவர்கள், கல்விமான்கள் எனப பலர் கலந்து கொண்டனர்.

மொறட்டுவ பல்கலைக்கழக துணைவேந்தர் தயந்த விஜயசேகர மாமனிதர் துரைராஜாவின் நினைவாக எழுதிய "THE NEED TO ENGINEER EDUCATION " எனும் நூல் கலந்து கொண்ட எல்லோருக்கும் வழங்கப்பட்டது. (36)

## நயினாதீவு அம்மன் ஆலயத்தில் திலீபன் மருத்துவ சேவையினர் சிறப்புச் சேவை

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற திருவிழாவில் புங்குடுதீவு தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் முதலுதவி அணியினர் தங்கி நின்று மருத்துவ உதவிகளை மேற்கொண்டனர். கடந்த 28ஆம் திகதி முதல் 2ஆம் திகதி வரை இச் சேவையை மேற்கொண்ட அவர்கள் சிறப்பு மருத்துவ நிலையங்கள் அமைத்து, வந்த மக்களுக்கு மருத்துவ சேவையும் வழங்கினர்.

### யாழ்...

ளின் ஈகம் உன்னதமானது என்பதை யாவரும் அறிவர்.

பொங்கிப் பிரவகிக்கும் சுதந்திர உணர்வு தமிழ் மக்களது அவலங்கள் போக்கப்பட வேண்டியவை என்ற நோக்கில் எழுந்த ஈகம், கடும்பயிற்சி, துணிவு, இலட்சியவேட்கை ஆகியவற்றின் மொத்த உருவெடுப்பாகவே கரும்புலிவீரன் விளங்குகிறான். எனவே கரும்புலிகளது இலக்கு தவறுவதில்லை. தமிழீழ தேசியத்தை வரித்துக் கொண்டுள்ள தமிழ் மக்கள் அனைவருமே தலை தாழ்த்தி நினைவு கூர்ந்து வீரவணக்கம் செலுத்தும் உன்னத உயர் நிலை எட்டியவர்கள் கரும்புலி மாவீரர்கள். கரும்புலி மாவீரர்களை நினைவுகூரும் நாளாகவும், தமிழீழ தேசியத்தின் பால்மீள் பற்றுறுதி கொள்ளும் நாளாகவும் கரும்புலிகள் நாள் முன்னெடுக்கப்படுகிறது.

யூலை 5ஆம் நாளன்று நெல்லியடி மில்லர் சதுக்கத்திலும், புங்குடுதீவு பெருகாட்டுச்சந்தி கந்தசாமி கோவில் முன்றலிலும், காரைநகர் கதிர்காம சுவாமி கோவில் முன்றலிலும் இடம்பெறும் கரும்புலிகள் நாள் நிகழ்வுகளில் தமிழ் மக்களனைவரையும் கலந்து கொள்ளுமாறு கரும்புலிகள் நினைவுநாள் ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொள்கின்றனர்.

### கரும்புலிகள்...

வைத்தார்.கரும்புலி லெப்.கேணல போர்க் அவர்களின் உருவச் சிலைக்கான மலர் மாலையினை அரசியல்துறையைச் சேர்ந்த பிறையாளன் அணிவித்தார். நினைவாலயத்தினை மாங்குள தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சச்சிதானந்தம் அவர்கள் திறந்து வைக்க கரும்புலிகளுக்கான பொதுச்சுடரினை மாங்குள காவல் துறை உறுப்பினர் ஏற்றினார். தொடர்ந்து வீரச்சாவடைந்த கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கான சுடரினை பாடசாலை மாணவர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் ஏற்றி மலர்களையும் தூவி அஞ்சலி செலுத்தினர்.

கரும்புலிகள் அஞ்சலியுரையினை மாங்குளம் மகாவித்தியாலய அதிபர்,மற்றும் முல்லை. மாவட்ட அரசியல் துறைபொறுப்பாளர் முகுந்தன், முல்லை. மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி ஆகயோர் நிகழ்த்த சிறப்புரையினை முல்லைத்தீவு பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அவர்கள் நிகழ்த்தினார். தமிழீழ பெ[illegible]ருண்மிய மேம்பாட்டு நிறுவனத்[illegible]தச் சேர்ந்த பூங்குன்றனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நன்றியுரையினை மாங்குள தேசிய எழுச்சிப் பேரவையை[illegible] சேர்ந்த சிவானந்தராசா நிகழ்த்தின[illegible]ர். லெப்.கெணல் போர்க் அவர்கள் வீரச்சாவடைந்த இடத்தில் அவரது உருவச்சிலைக்கு அருகிலேயே இன்நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச,லோ)

### தவறான...

தை ஒப்புக்கொண்டதுடன், ஆயுர்வேத வைத்தியர்கள் பொதுவாக ஆங்கில மருந்து பாவிக்கக் கூடாது. அதிலும் குழந்தைகளுக்கு பாவிக்கக்கூடாதென அறிவித்திருந்தும் ,தான் பாவித்தது பிழை எனவும் ஒப்புக்கொண்டார். இவர்மீது மேலதிக விசாரணை நடைபெறுவதாகவும் தற்காலிகமாக அவர் வைத்திய சிகிச்சைகள் மேற்கொள்வதிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப்பணியகத்தினர் அறியத்தருகின்றனர்.

### பாரவூர்தி....

கொண்டிருந்த பாரவூர்தி மோதியுள்ளது. இச்சம்பவத்தில் உந்துருளி ஓட்டுனரும், உந்துருளியும், பாரவூர்தி சக்கரத்திற்குள் சிக்குண்டதன் காரணமாக ஓட்டுனர் உடல் சிதறி ஸ்தலத்திலேயே பலியானார். உந்துருளியின் பின்னால் இருந்து பயணித்தவர் சம்பவத்தின் போது தூக்கி வீசப்பட்டதன் விளைவாக படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளை வண்ணாங்கேணியைச் சேர்ந்த மனோ(வயது29) என்பவரே இச்சம்பவத்தின் போது ஸ்தலத்தில் பலியானவராவார். 4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த க.நவரட்ணம் (வயது40) என்பவர் சம்பவத்தில் படுகாயமுற்றவராவார். தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர்.(சோ.து)

### தமிழ்த்...

ளதால் ஆகஸ்ட் மாதமளவில் இவ் விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை பெங்களூரில் பழநெடுமாறன் அவர்கள் ஒழுங்கு செய்துள்ள தமிழர்கள் சார்பான நிகழ்விலும் தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படலாமென கூறப்பட்டுள்ளது. (32)

### வவுனியாவில்...

இறுதி நாள் நிகழ்வுகள் பண்டாரிக்குளம் பைட்டர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. வவுனியாவின் கோட்டம், பிரதேச ரீதியாக தற்போது நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(21)

### இலங்கை...

ரிக்கா தெரிவித்துள்ளது. இதேவேளை அமெரிக்காவால் வழங்கப்பட்ட "கரேஜ்" என்ற கப்பல் இன்னும் மூன்று மாதத்தில் இலங்கைக் கடலில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக இலங்கைக் கடற்படைத் தளபதி தயாசந்தகிரி கூறியுள்ளார். இதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காக கடற்படைக் குழுவொன்று தற்போது அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (32)

### இடைக்கால...

அரச அதிகாரிகளின் திறமை குறித்து புலிகள் சந்தேகம் கொண்டுள்ளனர் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்தோடு, இடைக்கால நிர்வாகம் ஒன்றின் மூலம் புலிகள் இறுதித் தீர்வொன்றைத் தேடவிரும்புவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. சனாதிபதியின் இந்நிலைப்பாடு நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்மிடம் விளக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


## 4ஆம் ஆண்டு நினைவுகளில்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 14 * 05 * 1972 |  | 04 * 07 * 2000 |

**லெப்.கேணல் நிஸ்மியா/தாரணி**

**(ரஞ்சிதமலர் சிற்றம்பலம்)**

கொக்குத்தொடுவாய்

[ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர்
மாலதி படையணி துணைத்தளபதி ]

கனலாய் தகித்த களமுனைகள் பலவற்றில்
கால் பரவித்திரிந்த புயலே!
கனிவு சுரக்கும் விழிகளால் எமையெல்லாம்
காத்து வளர்த்திட்ட தாயே!
கனவு துயிலாத விழிகளோடு,
கல்லறையில் ஓய்வெடுக்கும் கண்மணியே !
காத்திரு வெற்றிச் செய்தியோடு
விரைவில் சந்திப்போம்.

*சாவகச்சேரி பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகிறோம்.

போராளிகள்

(4628)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.